186

# ஐக்கிய அரசு

மலர்-1 இதழ்-9

செப்டம்பர்-1934.

JL
V1m,N34k.
N34.1.9.
148732.

872

# ஐக்கிய அரசு

## (Co-operative Commonwealth)

MONTHLY ORGAN OF

THE YOUNG CO-OPERATORS' LEAGUE

16 NOV 1954
MADRAS

மலர் 1. செப்டம்பர். இதழ் 9.

பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | பாதுகாப்புகள் | 1 |
| 2. | ஐக்கிய அயர்லாந்து | 4 |
| 3. | கிருஷிகளும் கடன் சுமையும் | 12 |
| 4. | சுதேச சமஸ்தானத்தில் கூட்டுறவு இயக்கம் | 13 |
| 5. | மத்திய பாங்கு கமிட்டியார் சிபார்சுகள் | 14 |
| 6. | கொச்சி சமஸ்தானமும் கூட்டுறவு இயக்கமும் | 15 |
| 7. | மத்திய கூட்டுறவுக் கல்லூரி | 16 |
| 8. | அஷ்ட திக்கு | 19 |


காரியாலயம் :

29, கீழ ஆண்டார் வீதி,

தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி.

1934

# "ஐக்கிய அரசு"

போஷகர் :

டாக்டர் ஏ. மதுரம், புத்தூர், திருச்சி.

சங்கத் தலைவர் :

ஸி. பாசுதேவ், B.A., B.L., M.L.C.,

கிரகம்ஸ் ரோட், எழும்பூர், சென்னை.

காரியதரிசி :

டி. பி. குருசாமி பிள்ளை,

13, தென்னூர் ரோட், புத்தூர், திருச்சி.

கௌரவ ஆசிரியர் :

எஸ். ஜே. ரேத்தினசாமி, M.A., B.L., வக்கீல்,

பட்டர் ஒர்த் ரோட், தெப்பக்குளம், திருச்சி.

நிர்வாக ஆசிரியர் :

என். எஸ். கோவிந்தசாமி,

மண்ணச்சநல்லூர், திருச்சிறைப்பள்ளி.


| சந்தா விபரம் | | விளம்பர விகிதம் | |
|---|---|---|---|
| உள் நாடு வருடம் 1-க்கு | ரூ 5—0—0. | 4 வது பக்கம் அட்டை | ரூ. 30—0—0. |
| வெளி நாடு ,, | ரூ 6—0—0. | 3 வது பக்கம் அட்டை | ரூ. 25—0—0. |
| | | சாதாரண விளம்பரம் பக்கமொன்று | ரூ. 20—0—0. |

முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

10 பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு ஓர் பத்திரிகை அனுப்பிவரப்படும்.

முன் பணமின்றி விளம்பரம் ஏற்கப்பட மாட்டாது விளம்பரத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ மானேஜருக்கு உரிமையுண்டு.

## அறிவிப்பு

நமது காரியாலயத்திற்கு அனுப்பப்படும் கட்டுரைகள், கடிதங்கள், மணியார்டர்கள் முதலியனவற்றை என். எஸ். கோவிந்தசாமி, நிர்வாக ஆசிரியர், "ஐக்கிய அரசு" காரியாலயம், 29, கீழ ஆண்டார் வீதி, தெப்பக்குளம் திருச்சி, என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அன்றேல் தாமதமும், வீண் சிரமமும் ஏற்படுமென்பதை அறியவும்.


# ஐக்கிய அரசு

(CO-OPERATIVE COMMONWEALTH)

STANDS FOR

BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 செப்டம்பர் திருச்சி


## பாதுகாப்புகள்

பாதுகாப்புகள் என்றால் என்ன? என்பது ஆராய்ச்சி செய்தற்குறியதாகும். பாதுகாப்புகள் என்ற பதத்தை உபயோகிப்போர் பலர். நம்நாட்டில் எழுந்துள்ள சிக்கலான பல பிரச்சினைகளுக்குக் காரணம் பாதுகாப்புகள் என்ற பதமேயாகும். பாதுகாப்புகள் என்பதின் காரணமாக நாட்டில் நடந்துள்ள வாக்குவாதங்களும், ஏற்பட்டுள்ள சச்சரவுகளும், முறிபட்டுள்ள மகாநாடுகளும் கொஞ்ச நஞ்சமல்ல. பாது காப்புகள் காரணமாக அரசியல் வாதிகளிடையே அதிருப்தியும், சிறு பான்மையோரிடையே பீதியும், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போவது தெளிவு. பாதுகாப்புகள் வேண்டுமென்போர் பலர். எதிர்ப்போர் அநேகர். நாட்டில் இவ்வாறாக அதிருப்திக்கும், பீதிக்கும், வாக்கு வாதத்திற்கும், சச்சரவுக்கும் ஒற்றுமையின்மைக்கும் காரணமாக விளங்கும் பாதுகாப்புகள் என்பது என்ன? என்போமாகில் மிகமிக சர்வ சாதாரணமான விஷயமாகும். ஓர் மோட்டாரை எடுத்துக் கொள்வோம். வேகமாக மோட்டார் ஓடும் போது அவசியமானாலோ, ஆபத்து நேரிடக் கூடுமானாலோ, சட்டென்று நிறுத்துவதற்கு பிரேக் இருக்கிறதல்லவா? அது தான் பாதுகாப்பு என்பதாகும். மோட்டாருக்கு பிரேக் எவ்வாறு பாதுகாப்பாக இருக்கிறதோ அதுபோல் ஆட்சி முறை அமைப்பில் கவர்னருக்கோ, அல்லது வைஸ்ராயுக்கோ இருக்கும் விசேஷ அதிகாரம் பாதுகாப்பாகும். அதுபோல், பெரும்பான்மையோர், சிறுபான்மையோர் பிரச்சினையில் சிறுபான்மையோர் நன்மை புறக்கணிக்கப்படாமலிருக்க சட்ட பூர்வமாக அவர்களது உரிமைகளை ஒப்புக்கொள்வது ஓர் பாதுகாப்பாகும். இம்மாதிரியாக அளிக்கப்படும் பாதுகாப்புகளால் நன்மையும் விளையலாம், தீமையும் உண்டாகலாம். நன்மையும் தீமையும் உண்டாவது பாதுகாப்புகள் பிரயோகஞ் செய்யப்படும் முறையைப் பொறுத்திருக்கிறது. மோட்டாருக்கு பிரேக் இன்றியமையாததே. ஆனால், அந்த பிரேக்கை பயன் படுத்திக்கொள்ளும் திறமை மோட்டாரை ஓட்டும் டிரைவரைப் பொருத்ததாக இருக்கிறது. டிரைவர் அவசியமான சமயத்திலோ, ஆபத்து நேரிடும் சமயத்திலோ மோட்டாரின் பிரேக்கை உபயோகிக்காது பிரேக்கை உபயோகிப்பதின் மூலம் மோட்டாரை ஓட்ட முயலுவானாகில் என்னாகும். அதுபோலவே பாதுகாப்புகள் என்பதும் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டால் அப்பாது

148732

காப்புகளால் நன்மை ஏற்படுவதற்குப் பதில் தீமையே விளையும். இவ்வாறாக அரசியல் வாதிகளிடையே அதிருப்தியையும், சிறு பான்மையோரிடையே பீதியையும், நாட்டிலே ஒற்றுமையின்மையையும் உண்டுபண்ணியுள்ள பாதுகாப்புகள் பாங்குகளிலும் நுழைந்துள்ளதெனலாம். உதாரணமாக திருச்சி ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கை எடுத்துக்கொள்வோம். இப்பாங்கின் விதியை திருத்தவோ அல்லது மாற்றவோ வேண்டுமானால் அதன் மகாஜன சபைக் கூட்டத்தில் ஆஜராகியுள்ள நான்கில் மூன்று பங்கு பேர் அங்கீகாரஞ் செய்யவேண்டும் என்று சங்க அமைப்பு விதியில் காணப்பட்டுள்ளது. இம்மாதிரியாக இவ்விதி காணப்பட்டுள்ளதின் நோக்கம் பாங்கில் ஏதாவது மாற்றமேற்பட வேண்டின் பாங்கின் பங்காளராகவுள்ள பெரும்பான்மையோரது அபிப்ராயத்தின் பேரில் மாறுபாடு ஏற்பட வேண்டுமேயொழிய சாதாரணமான இரண்டொருவர் விருப்பத்தினால் பாங்கின் அமைப்புக்குப் பங்கம் ஏற்படக் கூடாதென்பதே யாகும். இம்மாதிரியான நன் நோக்கத்துடன்கூடிய பாதுகாப்பு பாங்கின் நலத்தைப் பாதிக்கக்கூடிய முறையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதற்கு ஒரு திருஷ்டாந்தத்தைக் குறிப்பிட விரும்புகிறோம். பாங்கின் விதியில் நெ 22 (ஏ), (பி) பிரிவின்படி கீழ்க்கண்டவாறு உள்ளது. அதாவது :—

ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு லோகல் சூபர்வைஸிங் யூனியன் மகாசபையாராலும், அந்தந்த யூனியன் கவர்னிங் பாடி அங்கத்தினர்களிலிருந்து ஒவ்வொரு யூனியனுக்கு ஒருவர் விகிதம் தெரிந்தெடுக்கப்பட்டவர்களும், ஜில்லா பெடரேஷன் பிரதிநிதி ஒருவரும், ஆடிட் யூனியன் பிரதிநிதி ஒருவரும், தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

"யூனியன் பிரதிநிதிகள் எவ்வளவோ அவ்வளவு பிரதிநிதிகள் தனி நபர் அங்கத்தினர்களிலிருந்து தங்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுவார்கள்."

மேற்கண்ட, சங்க விதிக்குத் திருத்தமாக ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன் சாரம், பாங்கின் நிர்வாகம் சங்கப் பிரதிநிதிகளில் 14 பேரும், தனி நபர் பிரதிநிதிகளில் 7 பேரும் ஆக 21 அங்கத்தினர்களடங்கிய ஒரு போர்டாரால் நடத்தப்படும் என்பதாகும். அமுலிலிருந்துவரும் பாங்கின் விதியின் பிரகாரம் யூனியன் பிரதிநிதிகள் எவ்வளவோ அவ்வளவு தனி நபர்களின் பிரதிநிதிகள் என்று இருப்பதால் யூனியன்களின் எண்ணிக்கைக்குத் தக்கபடி தனி நபர்கள் ஸ்தானம்பெற நேரிடுகிறது. இதனால், இரு தீமை ஏற்படுகிறது. தனி நபர்கள் 100 பேர் என்றால், பிரதம சங்கங்கள் 500-க்குக் குறைவில்லை; இந்த 500 சங்கங்களும் 19 யூனியன்களில் இணைக்கப்பட்டுள்ளன. இருந்துவரும் 19 யூனியன்களுக்கும் 19 பிரதிநிதிகள் என்றால், தனி நபர்கள் 19 ஸ்தானத்தைப் பெறுகின்றனர். இதனால் தனி நபர்கள் தங்களது எண்ணிக்கைக்கு கிரமமாகப் பெறவேண்டிய ஸ்தானத்தைக் காட்டிலும் அதிகமான பிரதிநிதித்துவத்தை அடைவதுடன், நிர்வாக சபையின் எண்ணிக்கையைப் பெருக்குவதுடன், பொருளாதார நெருக்கடியால் லேவாதேவி குறைந்து வருமானக்குறைவு ஏற்பட்டுள்ள இந்தக் காலத்தில் பாங்கிற்கு வீண்செலவை உண்டாக்கின்றனர். நிர்வாக சபையின் எண்ணிக்கையைக் குறைக்கவும், பொருள் விரயத்தைத் தடுக்கவும், பிரதம சங்கத்தாருக்கு நியாயம் வழங்கவும் வேண்டியது மிக அவசியமாகும். பிரஸ்தாபத் திருத்தப் பிரேரணை தற்போதுள்ள குறைகளைப் போக்குவதாக இருந்தும் பாங்கின் மகாஜன சபைக்கூட்டங்கள், நான்கில் மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாய் கொண்டுவரப்பட்டும் நிறைவேறாது தோல்வியடைந்து போனதென்றால் அதற்குப் பாங்கு விதியில் கண்டுள்ள பாதுகாப்பே காரணமாகும். திருத்தப் பிரேரணை நிறைவேற்றப்படின் பாங்கில் பதவி வகிப்போர் சிலர் தங்கள் பதவியை இழக்க நேரிடும் என்ற கவலையாலும், தங்களது செல்வாக்குக் குறையுமோ என்ற அச்சத்தாலும் பாங்கின் பாதுகாப்பில் சரண்புக முற்பட்டதே திருத்தப் பிரேரணை பலமுறை கொண்டுவரப்பட்டும் தோற்கடிக்கப்பட்டதெனலாம். இம்மாதிரியாக பாங்கின் முன்னேற்றத்தைக் கருதி கொண்டு வரப்பட்டுள்ள ஒரு முற்போக்கான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது பாங்கின் பாதுகாப்பு துஷ்பிரயோகம் செய்யப்பட்டதென்பதற்கு சிறந்ததோர் அத்தாட்சியாகும். நான்கில் மூன்று பங்கு பேரின் சம்மதத்தின் பேரில் பாங்கு விதி திருத்தப்படவேண்டுமென இருந்து வந்த பாதுகாப்பு இதுவரை அவசியமானதாக இருந்து வந்தபோதிலும் தற்போதைய நிலையில் அது பாங்கின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக காணப்படுவதால் அதனைத் திருத்த முற்படுவதே மேலென்போம்.



## ச்பாஷ்! ஹைதராபாத்

கிருஷிகளின் வருமானத்தைப் பெருக்க ஹைதராபாத் சர்க்கார் விசேஷ அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க முட்டை உற்பத்தி செய்வதும், விற்பனை புரிவதும் ஒரு சிறந்த உதவித் தொழிலாகையால் அது சமஸ்தானத்தில் எந்நிலையில் உள்ளதென்பதை விசாரணை செய்ய விவசாய இலாக்கா டைரக்டர் திரு. நைசமுஹீன் ஹைதர் முற்பட்டார். அவர் நாடெங்கும் விசாரணை நடத்தி, தனக்குக் கிடைத்துள்ள விபரங்களை கொண்டு, ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது :—

"தற்போதுள்ள நிலையில் விற்பனையாகியுள்ளதைக் காட்டிலும் முட்டை உற்பத்தி அதிகமெனலாம். ஆண்டுதோறும் ரூ. 4,40,000 பொறுமான கோழியும், முட்டைகளும், வெளியிடங்களுக்கு விற்பனையின் பொருட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. சமஸ்தானத்தில் இத்தொழில் இன்னும் விருத்தி அடைய மார்க்கமிருக்கிறது. நற்காலமாக எங்கும் உள்ளதைப் போன்று சமஸ்தானத்தில் சிக்கலான பிரசினை ஒன்று இல்லாதிருக்கிறது. இந்தியாவின் ஏனைய பாகங்களில் கோழி வளர்ப்பது தகாத காரியமாக இந்துக்களால் கருதப்படுகிறது. அம்மாதிரியான எண்ணம் ஹைதராபாத் சமஸ்தானத்திலுள்ள இந்துக்களிடம் கிடையாது. கோழி வளர்ப்பை அநேகர் ஜீவனோபாயத்திற்கு ஓர் உதவித்தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

இத்தொழில் விருத்தி அடையவேண்டுமானால் போதிய பிரசாரம் செய்யப்படவேண்டும். முட்டை நல்ல ஆகாரம் என்பதை பொதுஜனங்களுக்கு வற்புறுத்தவேண்டும். முட்டை உற்பத்தி வருமானத்திற்குரியதென்பதை உணரும்படிச் செய்யவேண்டும். கோழிகள் பிணிக்கு ஆளாகுவதும், உயர்ந்த தரமான கோழிகள் கிடைக்காமையும், உற்பத்தியாகும் முட்டைகளை விற்பனை புரிய ஒழுங்கான ஸ்தாபனங்கள் இல்லாமையும், இத்தொழில் விருத்திக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. இக்குறைகளை எளிதில் போக்கவேண்டும். கோழி வளர்ப்பு நிலயங்கள் நிறுவப்படவேண்டும். கோழிகள் விடுதி அமைப்பு, வளர்க்கும் முறை, முட்டைகளைக் கெடாமல் பாதுகாக்கும் விதம் ஆகியவற்றினை கிருஷிகளுக்குப் போதிக்க வேண்டும். வியாதியைத் தடுக்கவும், பிணியைப் போக்கவும், மருந்துகளை உபயோகிக்கும் முறை போதிக்கவும் வேண்டும். உயர்ந்த தரமான கோழிகள், கோழி விடுதி அமைக்கும் சாமான்கள், மருந்துகள் ஆகியவற்றை விற்பனை புரிய ஓர் ஸ்தாபனம் நிறுவப்படவேண்டும்."

மேற்கண்ட விவசாய இலாக்கா டைரக்டர் அறிக்கை ஹைதராபாத்தில் முட்டை உற்பத்தித் தொழிலின் நிலையை தெளிவு படுத்துவதுடன் அவர் கூறியுள்ள யோசனைகள் முட்டை உற்பத்தித் தொழிலில் பற்றுள்ள சகலரும் கவனிக்கத்தக்கதாகும். ஹைதராபாத்தைப் பின்பற்றி ஏனைய சுதேச சமஸ்தானங்களும், இந்திய அரசாங்கத்தாரும் நடப்பார்களாகில் நன்மை விளையுமெனலாம்.

# ஐக்கிய அயர்லாந்து

## III

விவசாய சம்பந்தமான கூட்டுறவு முறை முன்னேற வேண்டுமாயின், நாட்டுப் புறங்களிலுள்ள விவசாயிகள் ரொக்கம் கொடுக்காமலே, பின்னிட்டு தொகை கொடுக்கக்கூடிய சௌகரியத்துடன் தமக்கு வேண்டிய பொருள்களை அடைவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டுவது அவசியமென்பது பல நிபுணர்களது அபிப்ராயம். அவ்வாறேதான் பற்பல தேசங்களில் முக்கியமாய் ஜெர்மனி தேசத்தில், கூட்டுறவு முறை முன்னேறியது. ஜெர்மெனியில் "ரெய்பீசன் பாங்குகள்" என்ற கூட்டுறவு நாணய பாங்குகள் கூட்டுறவு முன்னேற்றத்திற்கு மிகவும் உதவின. ஆனால், இதற்கு எதிராக டென்மார்க் தேசத்தில் விவசாயக் கூட்டுறவு முறை கூட்டுறவு நாணயச் சங்கங்களின் உதவியின்றியே மிக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இதற்குக் காரணம் அந்த நாட்டு ஜனங்களின் இயற்கையான சுபாவமாகும்.

### கூட்டுறவு நாணய பாங்குகள்

1895-ம் வருஷம் வரையில் அயர்லாந்தில் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அந்த வருஷத்தில் எச். டபிள்யூ. உல்ப் என்பவர் உதவியுடன் "டொரையில்" என்ற இடத்தில் முதலாவது கூட்டுறவு நாணயச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அப்பொழுது அயர்லாந்தில் 40 வெண்ணெய்ச் சாலைகளும், கிளை வெண்ணெய்ச் சாலைகளும் இருந்தன. விவசாயப் பொருள்களை ஒற்றுமையாய் விலைக்கு வாங்குவதற்காக ஏற்பட்ட கூட்டுறவு விவசாயச் சங்கங்களும் பத்துக்குமேல் இருந்தன. அக்காலத்தில் கூட்டுறவு நாணயச் சங்கம் என்பது கிடையாது. பின்னர் தான் விவசாய நாணயச் சங்கங்கள் பல உண்டாயின.

1919-ம் வருஷத்தில் அயர்லாந்தில் 188 ஐக்கிய நாணயச் சங்கங்கள் இருந்தன. இவை அநேகமாய் ஜெர்மனியில் "ரெய்பீசன்" என்பவர் ஏற்படுத்திய சங்கங்களைப் போன்றவையே. அங்கத்தினர்கள் அனைவரும் தனித்தனியும், சேர்ந்தும் வரையறுக்கப்படாத பொறுப்பை ஏற்றுக்கொண்டனர். ஒரு சங்கம் கொடுக்கவேண்டிய கடனை பூராவையும், எந்த அங்கத்தினரிடமிருந்து வேண்டுமானாலும் வசூல் செய்யலாம். காரியதரிசிக்கும் சம்பளமில்லை. சங்கம் வேலை நடத்தும் செலவு மிகவும் குறைவானது. கடன் கொடுப்பதற்கு வேண்டிய மூலதனத் தொகை பலவாறாக சேகரிக்கப்படுகிறது. சங்கத்தின் கடன் வாங்கும் கமிட்டியின் ஜவாப்தாரியின் பேரில் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்குகளிலிருந்து வாங்கப்படுகிறது. சில சமயம் விவசாய இலாக்காவில் பணம் கொடுக்கிறார்கள். அங்கத்தினர்களிடமிருந்தும் ஏனையவர்களிடமிருந்தும் வாங்கும் டிபாஸிட்டு பணமும் இதற்கு உதவுகிறது. மகா யுத்தத்திற்குப் பிறகு விவசாய இலாக்கா பணம் கொடுப்பதில்லை. கொடுத்த பணமும் வசூலிக்கப்பட்டது.

1919-ம் வருடத்தில் 138 கூட்டுறவு நாணயச் சங்கங்களிலும் சேர்ந்து சுமார் 16 ஆயிரம் அங்கத்தினர்கள் இருந்தனர். மொத்த மூலதனம் சுமார் 67 ஆயிரம் பவுன். அதில் சுமார் 63 ஆயிரம் பவுன் டிபாஸிட்டு தொகை. சுமார் 34 ஆயிரம் பவுன் வரை கடன்கள் கொடுக்கப்பட்டன. வரவர வருஷா வருஷம் கடன் கொடுப்பதற்கு டிபாஸிட்டு பணமே அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. இது சந்தோஷிக்கவேண்டிய விஷயம். ஏனெனில் நாட்டிலுள்ள பணம் யாவையும், சேவிங்ஸ் பாங்குக்கு இழுக்க முயலுகிறார்கள். பொதுவாய் விவசாயிகள் அயலார்நடத்தும் பாங்கை விட சர்க்கார் சேவிங்ஸ் பாங்கையே நம்புவார்கள். இப்படி இருந்தும் சங்கங்களுக்கு டிபாஸிட்டு பணம் அதிகரிப்பது மிக திருப்திகரமான விஷயமே. இவ்வித கூட்டுறவு நாணயச்சங்கங்கள் தற்போதுள்ள நிலையில் அயர்லாந்துக்குள்ள தேவையைவிட அவை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மிக அவசியமாக இருந்தது. ஏனெனில் அக்காலத்தில் லேவாதேவிக்காரர்கள் அக்கிரமம் செய்து வந்தனர். கிருஷிகள்



லேவாதேவிக் காரர்களின் கையிலகப்பட்டு வருந்தாதபடி அவர்களுக்கு நம்பிக்கையின்மேல் முன் பணம் கொடுத்து, மெய் உதவி செய்ய ஓர் ஏற்பாடு பண்ணவேண்டிய அவசியமேற்பட்டது. அயர்லாந்தில் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுறவு நாணயச்சங்கங்கள் கிருஷிகளுக்குச் செய்துள்ள நன்மைகளைப்பற்றி கூட்டுறவு விவசாய அபிவிருத்திச்சங்கத்தின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. உதாரணமாக, 1899-ம் வருஷத்தில் 'கில்காமன்' என்ற இடத்தில் ஒரு கிருஷிகன் கூட்டுறவு பாங்கிலிருந்து 3 பவுன் கடன் வாங்கி 2 பவுனுக்கு 3 பன்றி வாங்கினான். ஒன்றை குட்டி போடுவதற்கு வளர்த்தான். எஞ்சிய ஒரு பவுனால் விற்கவேண்டியிருந்த ஒரு கன்றை வீட்டில் வைத்து போஷித்தான். மறு வருஷம் இவை 7 பவுன் பொறுமானமாயின. இவ்வாறு ஒரு வருஷத்தில் 3 பவுன் கடன்பெற்று அதை திரும்பக் கொடுத்த பிறகு 4 பவுன் லாபமும் அடைந்தான். மற்றும் ஓர் இடத்தில் 60 கிருஷிகர்கள் சேர்ந்து கூட்டுறவு நாணய பாங்கின் உதவியால் 30 தூவும் யந்திரம் வாங்கி தங்கள் உருளைக்கிழங்கு விவசாயத்தில் மிகச் செழிப்பும் லாபமும் அடைந்ததுமன்றி அந்த யந்திரங்களை வாடகைக்கு விட்டும் லாபமடைந்தனர். இவ்வாறு பற்பல உதாரணங்களால் பொருள் அபிவிருத்தி ஆனதுமட்டுமல்லாமல் ஜனங்களிடையே ஒற்றுமையும், உழைப்பும், நாணயமும் விருத்தியாகி இருப்பது கவனிக்கத்தக்கது.

கிருஷிகளுக்கு தன் லாப நஷ்டத்தை கவனத்துடன் அறிந்து கணக்கிட்டு சீர்திருத்திக் கொள்ளும் திறமை வந்ததும் அவர்கள் முன்னேற்றத்தின் முதற்படியை மிதிக்கின்றனர். இவ்வாறு அவர்களுக்கு அறிவும் தெளிவும் வருவது அங்கத்தினர்களது வரையறுக்கப்படாத பொறுப்பினால் மட்டுமல்ல, கடன் கொடுக்கும் முறையினாலாகும். கடன் கேட்பவன் பஞ்சாயத்தார் முன் கடன் மனுவுடன் வந்ததும், வாங்கப்படும் கடனின் அவசியம், அதனால் அவன் அடையக்கூடிய லாப நஷ்டம் முதலியன எல்லாம் அலசி அலசி ஆராய்ச்சி செய்கிறார்கள். அவன் நஷ்டப்பட்டால் தம்மையும் இழுக்குமே என்ற அச்சம் அவர்களுக்கு அக்கரை உண்டுபண்ணுகிறது.

கடன்வாங்குபவன் அந்தப் பணத்தை சரியானபடி உபயோகப்படுத்துகிறானா? என்ற விஷயங்களையும் அவன் கடனுக்குள்ள ஜாமீன்தாரர்களது பொறுப்பையும் கவனிப்பதால் கடனில் ஆழ்ந்த சில ஜில்லாக்களில் கிருஷிகள் பெரும் முன்னேற்றமடைந்துள்ளார்களெனலாம் சில சமயங்களில் கைமுதல் இல்லாதவன் 20 பவுனைக் கொண்டு அடையும் லாபத்தை முதலுள்ளவன் ஒரு பவுனைக் கொண்டு அடைவான். அந்த ஒரு பவுனையும் அவனுக்கு சரியான காலத்தில் கொடுத்து உதவினால் அவன் வாங்கிய தொகையையும் திருப்பிக் கொடுத்து மிச்சமும் பிடிக்கிறான். கோடைகாலத்தில் 24 ஷில்லிங்குக்கு இரண்டு பன்றி வாங்கி விருத்தி செய்து அவைகளை குளிர் காலத்தில் 110 ஷில்லிங்குக்கு விற்று, கடனையும் திரும்பக் கொடுத்து தானும் லாபமடைவான். பல ஏழைக் கிருஷிகள் இவ்வாறு இரண்டு பன்றி, அல்லது கன்று, அல்லது ஆடு விற்றாலன்றி பணம் என்பதையே கண்ணால் காண நேரிடாது. அவனுக்கு வேண்டிய உணவை அநேகமாய் அவனே உற்பத்தி செய்து கொள்ளுகிறான். உபரியாக வேண்டிய டீ, மாவு, சர்க்கரை, முட்டை முதலியதை தன் ஆடு, மாடுகளை பர்த்தியாகக் கொடுத்தே வாங்கிக் கொள்ளுகிறான் இதில் மெய்யாக அப் பொருளின் பாதி விலைக்கு ஏமாந்து போவான். அவனது பன்றி அல்லது பசு இறந்து போனால் அவன் திக்கற்றவனாகிறான். லேவாதேவிக்காரன் அவனை நம்பினாலன்றி அவனுக்குப் பண உதவி செய்பவர் கிடையாது. இவ்வாறு திக்கற்றுப் போய் தவிப்பவர் நாட்டில் கணக்கற்றவர் உள்ர், ஆகையால் இவ்வித விவசாய நாணய கூட்டுறவு பாங்குகளை ஏற்படுத்துவதைப்போல் நாட்டுக்கு நன்மை செய்யும் வழி வேறு எதுவுமில்லை.

"ரெய்பின் சன்" முறைப்படி அமைக்கப்பட்ட பாங்குகள் முன்னேறி உபகாரம் செய்ய வேண்டுமானால் அதற்கு விஷயம் தெரிந்த திறமையுடைய, யோக்கியப் பொறுப்பு வாய்ந்த காரியதரிசி இருக்க வேண்டியது மிக அவசியம். சில நிபந்தனைகளையும் நழுவாது வற்புறுத்த வேண்டும். இவைகளுள் முக்கியமானது கடன் எதற்காக என்று கடன் மனுவில் விவரிக்க வேண்டுவதாகும். கடன் வாங்குபவனை அபிவிருத்தி அடையச் செய்து அவன் சிக்கன வாழ்வு நடத்தவும், நாணயத்தைக் காப்பாற்றுமாறும் செய்யவேண்டும். அதன் உபயோகத்தாலேயே

அவன் திரும்பக்கொடுக்கும் சக்தி எற்பட வேண்டும். வாங்கும் கடன் மனுவில் கண்டபடிதான் கடன் வாங்கிய பணம் உபயோகப்படுத்தப்படுகிறதா என்பதையும், அவன் சிக்கனமாயும் உழைப்பாளியாயும் இருந்து லாபமடைந்து வருகிறானா? என்பதையும் கவனிப்பது கடன் கொடுக்கும் பஞ்சாயத்தார் பொறுப்பு. இவ்விஷயங்களையும் யாவற்றிக்கும் மூல ஆதாரமாகிய உத்தம யோக்கியதை கடன் வாங்குபவனுக்கு உளதா என்பதையும், நான்கு பஞ்சாயத்தார்கள் கவனிக்க வேண்டுமாயினும் பஞ்சாயத்திலுள்ள இரண்டொருவராவது ஒவ்வொரு அங்கத்தினரது உள் நிலையை அறியுமாறு சங்கத்தின் ஸ்தல விஸ்தீரணம் சிறிதாய் இருக்கவேண்டும். இவ்வாறு ஒரு சங்கத்தின் அங்கத்தினர்கள் யாவரும் நெருங்கி அருகாமையில் வசிப்போராய் இருக்க வேண்டும் என்பதை "ரெய்பீசன்" என்பவர் இடைவிடாது சொல்லி வந்தார். இது விஷயத்தை கவனியாது அமைக்கப்பட்ட சங்கங்கள் பொதுவாய் கஷ்டத்திற்கே வந்திருக்கின்றன.

கடன்களை மெய்யாகத் திரும்ப செலுத்துவதற்கு பதில் கடன் பத்திரத்தை புதுப்பிக்கும் வழக்கத்தை ஒழிக்க வேண்டியது மற்றோர் முக்கிய விஷயம். கடனைக் கொடுத்தவுடன் மறுபடி கடன் கேட்பவரிடம் புதுக்கடன் எதற்காக கேட்கப்படுகிறது என்று ஆராய்ந்து கேட்க வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் ஒவ்வொரு கடனையும் திரும்பக் கேட்கவேண்டும். கொடுக்க முடியாவிடின் அதற்குக் காரணத்தை விசாரித்து தகுந்த காரணமிருந்தால் வாயிதாவை தள்ளி வைக்கவேண்டும். ஒருவர் கடனை திரும்பக் கொடுத்த பிறகு புதுக்கடன் கேட்டால் முதலில் கடன் வாங்கியதால் அந்த அங்கத்தினர் எவ்வளவு லாபமடைந்திருக்கிறார் என்றும், மீண்டும் கடன் கேட்கும் உத்தேசம் நன்மை விளைவிக்கக்கூடியதுதானா என்றும் கவனித்துக் கொடுக்கவேண்டும். இவ்வாறு புதுக்கடன் கேட்கும்போதும், கடனைப் புதுப்பிக்கும் போதும் தகுந்த கவனம் செலுத்தாமையால் பல சங்கங்கள் சங்கடப்படுகின்றன.

சங்கத்தின் நலத்தை உத்தேசித்து க்ஷேமநிதி ஏற்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியமெனலாம். இந்நிதி பண நெருக்கடி ஏற்படும் சமயங்களில் உதவும். சங்கத்திற்கு கடன் கொடுப்பவருக்கும், அதில் பண டிபாசிட்டு செய்பவருக்கும், சங்கத்தின்மீது மதிப்பையும் நம்பிக்கையையும் உண்டாக்கும். அவ்வாறு க்ஷேமநிதி எற்படுத்துவதற்கு வாங்கும் கடனுக்கு சங்கம் கொடுக்கும் வட்டிக்கும், அங்கத்தினர்களுக்குக் கொடுக்கும் கடனுக்கு சங்கம் வசூல் செய்யும் வட்டிக்கும் வித்தியாசத்தை நியாயமான லாபம் தருமாறு கவனித்து எற்படுத்தவேண்டும். பல சங்கங்கள் 100-க்கு 4 வட்டி விகிதம் கடன் வாங்கி 5 வட்டிக்குக் கடன் கொடுத்தன. ஆகவே சங்கத்தின் செலவு மிகவும் அற்பமாயிருந்தும் வருஷக்கடைசியில் நஷ்டமே ஏற்பட்டது. அதனால், 100-க்கு 2½ விகிதம் அதிக வட்டி வசூலிப்பது நலம் என்று அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தார் கூறியுள்ளனர்.

சென்ற சில வருஷங்களாக அயர்லாந்தில் உள்ள கூட்டுறவு நாணயச்சங்கங்கள் அபிவிருத்தியின்றி ஸ்தம்பித்திருக்கின்றன. சில சங்கங்கள் மிகக்குறைவான தொழில் நடத்துகின்றன. கூட்டுறவு நாணயச்சங்கங்கள் யாவுமே அவை ஆரம்பித்தபோது கூட்டுறவு இயக்கத்தில் எவ்வளவு பிரதானமான நிலைமையை வகித்தனவோ அவ்வளவு முதன்மையான ஸ்தானத்தை பின்னர் வகிப்பதற்கில்லை. இதற்கு ஓர் முக்கிய காரணம் சர்க்கார் விவசாய இலாக்காவுக்கும், அயர்லாந்து அபிவிருத்தி சங்கத்திற்கும் உள்ள தாவாக்களே. மேலும், கூட்டுறவு இயக்கம் முன்னேறி வந்தமையால் கிருஷிகள் கடனாளிகளாக இருப்பதினின்று முதலாளிகளாக நேரிட்டதால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவசியமில்லாது போய்விட்டதென்றும் சொல்லலாம்.

ஜெர்மனியில் கூட்டுறவு நாணயச்சங்கங்கள் ஏற்படுத்தும்போது அவைகளின் உத்தேசம் கடன் கொடுப்பதைவிட சிக்கனம் ஏற்படுத்துவதே. அவைகளுக்குப் பெயர் "சிக்கனப் பண உதவி பாங்கு" என்பதாகும். அயர்லாந்தில் சிக்கனத்தைவிட உதவிக்கடன் என்பதேமுக்கியமாகிவிட்டது. அயர்லாந்து ஏழ்மைத்தனத்தில் ஆழ்ந்த நாடாக இருந்த போதிலும், 1915-ல் சேவிங்ஸ் பாங்குகளிலும், ஜாயிண்டு ஸ்டாக் பாங்குகளிலும் நீடித்தகால டிபாசிட்டாக ஜனங்களால் போடப்பட்ட பணம் 8 கோடி பவுன்.



அதாவது சராசரி ஜனத்தொகையில் தலைக்கு 20 பவுன் விகிதமாகிறது. இதில் 100-க்கு 5 பங்கு பணமாவது கூட்டுறவு நாணயச்சங்கங்களின் உதவியின் பொருட்டு கொண்டு வரப்படுமாகில் கூட்டுறவு இயக்கம் தலை தூக்கி நாட்டைக் காக்கும் வலிமை அடையும். இப்படி டிபாசிட்டுகளை இழுப்பதற்கு கூட்டுறவு இயக்கத்திற்கு அரசாங்கத்தார் பண உதவி அல்லது ஜாமீன் அவசியம் என்பது பலருடைய அபிப்ராயம். பல தேசங்களில் அப்படியே நடக்கிறது. ஆயினும், இவ்வளவு காலமாக கூட்டுறவு இயக்கம் இருந்திருப்பதின் பயனாக ஜனங்களும் கிருஷிகளும் தாமே தம் சங்கங்களை நம்புவது நலம். கூட்டுறவு நாணயச் சங்கங்கள் செழிப்பான ஜில்லாக்களிலாவது வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் வியாபாரத் தொழிலை நடத்தினால் அல்லது வியாபாரம் செய்யும் சங்கங்களுக்கு பண உதவி செய்தால் பொது ஜன சமூகத்தின் பணத்தை மேற்கூறியபடி கூட்டுறவு இயக்கத்திற்கும் கொண்டு வரலாம்.

## கூட்டுறவு கைத்தொழில் சங்கங்கள்

விவசாயமே முக்கிய தொழிலாக இருக்கும் நாடுகளில் விவசாயமும், கால்நடை சம்பந்தமான வெண்ணை முதலிய கைத்தொழிலும் தவிர வேறு கைத்தொழில்களும் இருக்க வேண்டியது அவசியம். விவசாயம் செய்வோருக்கு வருஷம் பூராவும் வேலை இராது. வேலை இல்லாத நாள் பல உண்டு, அந்தக்காலத்தை சோம்பலிலும், வம்பிலும் கழிப்பதைவிட வேறுவித கைத்தொழில்களில் உபயோகிப்பது நன்மை தருவதுடன் பொருளையும் அளிக்கும். அயர்லாந்து இந்தியாவைப்போல் விவசாய தேசமானதால் அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தார் வெண்ணை முதலியதை விருத்தி செய்வதுடன் சணல் உற்பத்தி, கை நெசவு, சரிகை போடுவது, தேனீ வளர்ப்பது, பழங்கள் உற்பத்தி செய்வது முதலிய மற்ற கைத்தொழில்களை நாட்டில் விருத்தி செய்யவும் கூட்டுறவு முறையை உபயோகப்படுத்தினர். தவிரவும் மேல் நாட்டில் கோழி, முட்டை, பன்றி இறைச்சி, ஆடு, மாடு, இறைச்சி முதலியவைகளை உணவாதலாலும் அவைகளையும் உற்பத்தி செய்து அயல் தேசங்களுக்கு அனுப்ப முயற்சித்தனர்.

ஆனால் இவ்வாறு புதிய முறையில் கைத்தொழில்களை ஏற்படுத்துவதும் க்ஷீணதிசையிலிருப்பவைகளை நூதன முறைகளின்படி முன்னேறச் செல்வதும் எளிதான காரியமல்ல. பற்பல சிரமங்கள் ஏற்பட்டன. வெகு காலமாய் அரை வயிற்றுக்கு உண்டு தலைவிதி என்று சோம்பலாயிருக்கும் கிருஷிகளுக்கு புது முறைகளிலும் உழைப்பிலும் விருப்பம் வருவதில்லை. பல சந்தேகங்கள்தான் வருவது வழக்கம். தகப்பன், பாட்டன் நாள்முதல் தொன்று தொட்டு இருந்த முறைப்படியே நாங்களும் இருக்கிறோம் என்போர் சிலர். புதுமுறை எதுவும் எங்களுக்கு வேண்டாம் என்போர் பலர். வெகு சிரமமெடுத்து உற்பத்தி செய்தாலும் அவைகளை சரியான முறைப்படி சரியான இடங்களுக்கு ஏற்றுமதி செய்தாலன்றி லாபம் வராது. அதற்குத் தகுந்த முறைகளைக் கொள்ளவேண்டும். பலர் ஒன்றுசேரவேண்டும், உற்பத்திசெய்யும் முறைகளை கற்க வேண்டும். உற்பத்தி செய்யும் முறைகளை நவீன சாஸ்திர ஆராய்ச்சிக்கு எற்ப புதுப்பிக்கவேண்டும். இல்லாவிடில் அந்நிய நாடுகளுடன் எதிர்த்து நிற்க முடியாது. இதற்கெல்லாம் தகுந்த எற்பாடு செய்வதற்கு வேண்டிய பணம் இல்லை. ஆகையால் மிக முக்கியமாய் விவசாயம்—கால் நடை முதலியவைகளிலேயே கவனம் செலுத்த நேரிட்டது. இத்துடன் சணல் உற்பத்தி, கோழி வளர்ப்பது முதலிய தொழில்களுக்கு வேண்டிய சாஸ்திர ஆராய்ச்சி உதவி கொடுப்பதில் அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்திற்கு சர்க்கார் விவசாய இலாக்கா உதவி இல்லாமை தடையாக இருந்தும் உதவிக் கைத்தொழில்கள் அயர்லாந்தில் நன்கு விருத்தி அடைந்திருக்கின்றன.

### முட்டை உற்பத்தி

இனி ஒவ்வொரு வகைத் தொழிலாய் கவனிப்போம். முதலில் கோழி முட்டை உற்பத்தியை எடுத்துக்கொள்ளுவோம். அயர்லாந்தில் கிருஷிகள் இதனை லாபம் தரும் ஒரு தொழிலாகக் கருதாமல் அஜாக்கிரதையாய் இருக்கின்றனர். ஆகவே, இங்கிலாந்துக்கு வேண்டிய முட்டைகள்

டென்மார்க்கு, ருஷியா முதலிய தூர தேசங்களிலிருந்து வந்தன. அயர்லாந்து முட்டை என்றால் ஓர் கேலியாய் இருந்தது. இதற்குக் காரணம் யாதெனில் அயர்லாந்தில் முட்டைகளை தரம் பார்த்து பிரித்து விற்பதில்லை. அவைகளை ஒழுங்காக பொட்டலஞ் செய்து அனுப்பத் தெரிவதுமில்லை. பழைய முட்டை, புதியது நல்லது, அழுகியது எல்லாம் ஒரே கும்பலாகக் கொட்டப்படும். நன்றாய் சுத்தஞ் செய்யப்படாமல் அழுக்காகக் காணப்படும். இவ்விஷயங்களில் எச்சரிக்கையாய் இருக்கவேண்டுமென்பது கிருஷிகளுக்குத் தெரிவதில்லை. முட்டைகளை ஜாக்கிரதையாய் பந்தோபஸ்து செய்தால் அவை எவ்வளவு விலை தரும் என்பது அவர்களுக்குத் தெரியாது. தெருவில் வரும் சில்லரை வியாபாரிகளுக்கு அற்ப விலைக்குத் தள்ளி விடுவது வழக்கம். பத்துப் பன்னிரண்டு ஆகும் வரையில் புதியது, பழயது, சிறியது, பெரியது, எல்லாவற்றையும் சேர்த்து வைத்து, பிறகு அற்ப விலைக்கு அல்லது டீ, சர்க்கரை, இவைகளுக்கு பதிலாகத் தள்ளி விடுவார்கள். இவ்வாறு சில்லரை வியாபாரிகள் சேர்த்து வைத்து விற்கு முன் அவை மிகக் கெட்டுப்போகும். இக் குறையைப் போக்க அயர்லாந்து விவசாய அபிவிருத்திச் சங்கத்தார் முற்பட்டனர். முதலில் முக்கியமான மூன்று இடங்களில் முட்டை வாங்கி ஏற்றுமதி அல்லது விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தினர். சுற்றுப் பிரதேசத்திலுள்ள அங்கத்தினர்களது முட்டைகளை எல்லாம் வாங்கி அவற்றின் விலையை வரவு வைத்துக்கொண்டு முட்டை விற்ற பின்னர் பணத்தைக் கொடுத்து வந்தனர். முட்டைகளின் விலை நிறைப் படியும் தரப்படியும் நிர்ணயிக்கப்பட்டது. முட்டைகள் அதிக நாள் தங்காமல் அவ்வப்போது விலையாகி வந்தன. கிருஷிகளும் சிறந்தது எது என்பதை அறிந்து கொள்ளலாயினர். இத்துடன் நல்ல கோழிகள் எவை, கோழிகள் நல்ல முட்டையிடவோ அல்லது குஞ்சு பொரிக்கவோ உத்தம வழி எது, இவைகளைப் பற்றி எல்லாம் கிருஷிகளுக்குப் போதித்தனர். இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் உள்ள மொத்த வியாபாரிகளிடம் ஒப்பந்தம் செய்து அவர்கள் சொல்லும் நிபந்தனைகளுக்கு ஏற்றவாறே கிருஷிகளுக்கு முட்டை உற்பத்தி செய்யும் முறையைப் போதித்தனர். பின்னர், அவைகளை அயல் தேசங்களுக்கு அனுப்ப தரம், பருமன், குணம், நிறை முதலியது பார்த்து பிரித்து சிறிதும் அழுக்கின்றி சுத்தஞ் செய்து புதிதாய் உடனுக்குடனே நவீன உத்தம முறைப்படி பொட்டலஞ் செய்து அனுப்ப ஒரு ஏற்பாடு செய்தனர். இம்முறைகளை எல்லாம் ஜனங்களுக்குக் கற்பிப்பதற்காக டென்மார்க் தேசத்திலிருந்து ஒரு நிபுணரை வருத்தினர். இவ்வாறெல்லாம் சீர் திருந்தியபின் வெளி தேசங்களில் அயர்லாந்து முட்டை டென்மார்க்கு ருஷிய முட்டைகளை விடச் சிறந்ததென பெயர் பெற்றது. பலர் பலவாறு ஏற்றுமதி செய்து பெயரையும் நாணயத்தையும் கெடுத்து விடாதபடி சங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் முட்டைப் பொட்டலங்களுக்கு ஓர் தனி வியாபாரக் குறியும் ஏற்படுத்தினர்.

இவ்வாறே உணவுப்பொருளாக கோழி முதலியதை ஏற்றுமதி செய்வதிலும் அயர்லாந்து கிருஷிகள் கவனமற்றிருந்தனர். எனவே, அயர்லாந்திலிருந்து அற்ப விலைக்குக் கோழி முதலியதை வாங்கிப் போய் இங்கிலாந்தில் அவைகளுக்கு தானியம் முதலிய உணவுகள் கொடுத்து "சர்ரே பௌல்" என்ற பிரசித்த பெயருடன் அவைகளை மிகுந்த லாபத்திற்கு விற்பது வழக்கம். அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தார் இவ்விஷயங்களை எல்லாம் தெளிவாய் எடுத்துரைத்து பல வியாசங்கள் எழுதி பிரசுரம் செய்து நாடெங்கும் பரப்பி அயர்லாந்திலேயே அந்த கோழி முதலியதை உத்தம முறைப்படி கொழுக்கச் செய்து மிக உயர்ந்த விலைக்கு ஏற்றுமதி செய்யும்படி செய்தனர். இதற்கும் கூட்டுறவு சங்கங்களே உதவியளித்தன. இச்சங்கங்கள் அங்கத்தினர்களிடமிருந்து கோழி முதலியதை வாங்கி போஷித்து நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்து லாபத்தை அங்கத்தினர்களுக்குப் பிரித்துக் கொடுத்தன.

## இறைச்சி உற்பத்தி

அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தாரின் முயற்சியால் இறைச்சி உற்பத்தி சங்கங்கள் நிறுவப்பட்டன. ராஸ்கிரியா, வெக்ஸ்போர்ட் என்ற இரண்டு இடங்களில் இவை அங்கத்தினர்களது பன்றிகள், ஆடு மாடு முதலியதை விலைக்கு வாங்கி உத்தம நவீன முறைகளால் அவைகளிலிருந்து இறைச்சி, நாக்குகள், கொழுப்பு எண்ணெ முதலியன உற்பத்தி செய்து தம் நாட்டில் விற்கின்றனர் அல்லது அயல் நாட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். கழிவுப் பொருள்களை உரமாக மாற்றி விடுகிறார்கள்.



## தேனீ, பழம்

இவையுடன் தேனீக்களை வளர்த்து வீடுகளிலேயே தேன் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தொழிலும், பழத் தோட்டங்கள் உண்டாக்கி பழங்களை உற்பத்தி செய்து வியாபாரஞ் செய்யும் தொழிலும் கூட்டுறவு முறையால் விருத்தி அடைகின்றன. உற்பத்தியாகும் தேனை தரப்படி பிரித்து, விலை நிர்ணயித்து, வியாபாரம் செய்கிறார்கள். ஆனால், இது அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாடு அல்ல. விவசாய அபிவிருத்தி சங்கத்தார் கூட்டுறவு முறையைப் பரப்பியதின் பலனாக இவை யாவும் கூட்டுறவு முறையில் தன் முயற்சியின் பேரில் நடைபெற்றதெனலாம்.

## சணல் உற்பத்தி

வடக்கு அயர்லாந்திலுள்ள சணல் உற்பத்தி நெசவுத் தொழில்களிலும் நூதன உற்பத்தி முறை, நெசவு முறை முதலியதை அயர்லாந்து விவசாய அபிவிருத்தி சங்கத்தார் கற்பித்து அத தொழில்களை விருத்தி செய்தனர். இதற்கு முதலில் சணல் உற்பத்தி செய்பவரது பிரதிநிதிகள் சிலரையும், அதை நெய்பவர்களது பிரதிநிதிகள் சிலரையும் ஓர் முறை சந்தித்துப் பேசச் செய்தனர். இதன் பலனாக உத்தம முறையில் சணல் பயிர் செய்வதற்கு ஐந்து கூட்டுறவு சங்கங்கள் உண்டாயின. அதன் பலனாக மறு வருஷத்தில், முன் வருஷங்களைவிட, சணல் உற்பத்தி செய்து விற்பனை செய்தவர்களுக்கு இரண்டு பங்கு லாபம் கிடைத்தது. அது முதல் வட அயர்லாந்தில் இத்துறையில் கூட்டுறவு இயக்கம் பரவி வருகிறது.

## குடிசைத் தொழில்

கூட்டுறவு இயக்கத்தில் மற்றொரு முக்கியமான அம்சம் குடிசைத் தொழில்கள் அல்லது வீட்டுக் கைத்தொழில்கள் உண்டாக்குவதாகும். தற்காலத்தில் நகரங்களில் தொழிற்சாலைகள் யந்திர மூலம் ஏற்படுகின்றன. யந்திரங்களை எதிர்க்க முடியாமல் நாட்டிலுள்ள கைத்தொழில்கள் நசிக்கின்றன. ஆகவே, பிழைப்புக்காக நாட்டுப்புறங்களிலுள்ள தொழிலாளர்கள் நகரங்களுக்குச் செல்லுகின்றனர். அங்கும் பலருக்கு வேலை கிடைப்பதில்லை. அதிருப்தி, அசௌக்கியம், ஜன நெருக்கம் பிணி முதலியன உண்டாகின்றன. இவ்வாறு நாடு கேடு அடையாமலிருப்பதற்கு ஆண் பெண் அனைவரும் தத்தம் வீட்டில் இருந்து வேறு வேலை இல்லாத சமயங்களில் செய்யக்கூடிய கைத்தொழில்களை நாட்டில் உண்டாக்க வேண்டும். அதற்கு வேண்டிய முன் பணம், பொருள் உதவி, தொழில் முறை போதிக்க ஏற்பாடு, உற்பத்தியான பொருளை கால நிலைக்கு ஏற்றவாறு தரம்பிரித்து கலப்பின்றி, சுத்தமாய், தகுந்த இடங்களுக்கு அனுப்பி விற்க ஏற்பாடுகள் யாவும் கூட்டுறவு சங்கங்களாலேயே முடியும்.

இந்தியாவைப் போல் அயர்லாந்தும் விவசாய நாடானதால் பல துறையிலும் இந்தியாவிலுள்ளது போன்ற கஷ்டங்கள் குடிகொண்டிருந்தன. ஜரிகை பின்னுவது, பனியன், சாக்ஸ், டேபிள் துணிகள், கைக்குட்டைகள் முதலியவற்றிற்கு எல்கை கட்டுதல், முதலிய சில வீட்டு வேலைகளை ஜனங்களுக்குக் கற்பிக்கவும் பொருள் கொடுத்து உற்பத்தி செய்யவும், உற்பத்தியான பொருளை வாங்கிக் கொள்ளவும் கூட்டுறவுச் சங்கங்கள் அயர்லாந்து விவசாயச் சங்கத்தாரின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்டன. இவ்வாறு கையால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் யந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் காட்டிலும் உத்தம குணமுடையவையாக இருக்கும். அறிஞர்கள் இவைகளுக்கே அதிக விலை கொடுப்பார்கள். இதனால் தொழிலாளரின் திறமையும், மனோபாவமும், அபிவிருத்தியாய் நாட்டில் பற்பல கலைகளை விருத்தி அடையச் செய்யும். கலைகள் விருத்தியடைவதே நாட்டின் நாகரீக வளர்ச்சிக்கு அறிகுறி. இதை எல்லாம் யாவரும் வரவர உணருகிறார்கள்.

## கூட்டுறவு ஸ்டோர்கள்

ஆதியில் அயர்லாந்தில் கூட்டுறவு முறை ஆரம்பித்தபோது சர் ஹோரஸ் ப்ளங்கெட்டு இங்கி

லாந்திலுள்ள "ராக்டேல்" சங்கங்களைப்போல் உணவு விடுதிகள் ஏற்படுத்தினர். இங்கிலாந்திலுள்ள நகரங்களில் வசிக்கும் பலவித தொழிலாளிகளுக்கு உணவு, உடை முதலியதற்கு வேண்டிய சாமான்கள் எளிதில் கிடைக்காதகையால் அவைகளை வாங்கி கொடுப்பதற்கு அவர்களுக்கு இவ்வித சங்கங்கள் மிக உதவின. ஆனல் அயர்லாந்தில் ஏற்படுத்திய இவ்வித சங்கங்களின் அங்கத்தினர்களோ கிருஷிகர். இவர்களுக்கு நகரிலுள்ள தொழிலாளரைப் போன்று உணவுப் பொருளுக்குக் கஷ்டமில்லை.

நகரங்களில் கிடைப்பது நாட்டில் கிடைக்காது. நாட்டில் கிடைப்பது நகரங்களில் கிடைக்காது. ஆகவே, நாட்டுப்புறத்தாரது தேவையும, நகரத்தாரது தேவையும் வேறுபடும். உதாரணமாய் நகரத்தாருக்கு நெல் விலை குறைந்தால் சந்தோஷம்; கிராமத்தாருக்கு நெல் விலை ஏறினுல் சந்தோஷம். ஆகவே, இங்கிலாந்திலுள்ள கூட்டுறவு சங்கங்களின் உதவியுடனும், அவைபோலவும் அயர்லாந்தில் ஏற்படுத்திய சங்கங்களில் கிருஷிகளுக்குக் கெடுதியேயன்றி, உதவி இல்லை என்று சில காலத்தில் தெரிய வந்தது. அதனுல் அத்துறையில் எடுக்கப்பட்ட முயற்சி கைவிடப்பட்டது. விவசாய அபிவிருத்தி சம்பந்தமான புதிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவை பொருள் உற்பத்தி சங்கங்களாயின. "தொழிலாளர் உணவு ஸ்டோர்கள்" அயர்லாந்தில் விருத்தி அடையவில்லை. கடைசியாக 1919-ம் வருஷத்தில் மொத்தம் 48 சங்கங்களே உள்ளன. அவற்றில் நான்கு சங்கங்களே தவிர ஏனைய யாவும் சிறியன.

பெல்பேஸ்ட், டப்லின், என்னிஸ் காரதி, லிஸ்பர்ன் என்ற நாலு பட்டணங்களிலுள்ள சங்கங்கள்தான் ஆயிரம் அங்கத்தினர்களை உடையன. இவ்விடங்களில் இச்சங்கங்கள் விருத்தி அடையக்கூடும். பெல்போஸ்ட் சங்கத்தில் தற்போது 21,300 அங்கத்தினர்களுக்கு மேல் இருக்கிறார்கள். அது நன்ருய் விருத்தி அடைந்திருக்கிறது. அதில் 700-க்கு மேற்பட்ட சிப்பந்திகள் இருக்கிறார்கள். கல்வியைப்பரப்ப இச்சங்கம் வருஷமொன்றுக்கு 1800 பவுன் வரை செலவு செய்கிறது.

## ரொட்டிச் சங்கங்கள்

சிறக, கூட்டுறவு ரொட்டிச் சங்கங்கள் என்று பெரிய ரொட்டித்தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவை ரொட்டி உற்பத்தி செய்து நாடெங்கும் கொடுக்கின்றன. முதலில் இந்த ரொட்டியை ஸ்காட்லாந்திலுள்ள 'கிளாஸ்கோ' நகரத்தில் உள்ள இந்த சங்கம் உற்பத்தி செய்து கப்பலில் அயர்லாந்துக்கு அனுப்பி வந்தது. இதில் ஒரு நாள் தாமதமேற்பட்டதால் அயர்லாந்திலேயே ரொட்டியை உற்பத்தி செய்ய வேண்டுமெனி யவர் விரும்பினர்.

அப்படியே பெல்பேஸ்ட் நகரத்தில் இச்சங்கத்தின் கிளைச்சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 1905-ம் வருஷத்திற்கு பின்பு இது மிக விருத்தி அடைந்து அயர்லாந்து தேசத்திலுள்ள கூட்டுறவு சங்கங்கள் யாவுக்கும் ரொட்டி கொடுக்கிறது.

## பொதுஜன சேவை

கூட்டுறவுச் சங்கங்கள் வரவர கூட்டுறவு முறையோ அல்லது தொழில் விருத்தியோ, இவற்றினைப்பற்றிய கல்வியை பரப்புவதிலோ அதிக கவனம் செலுத்தி வருகின்றன. பெல்பாஸ்ட் சங்கத்தில் அங்கத்தினர்கள், பொதுஜனங்கள், குழந்தைகள் யாவருக்கும், பொதுப்படிப்பு, கூட்டுறவு முறை சங்கீதம் முதலியது கற்பிக்கிறார்கள். நீந்துதல், ஜலத்தில் விழுந்தவரைக் காப்பாற்றுதல் முதலியவைகளைக் கற்றுக் கொடுக்கிறார்கள். குளிர்காலத்தில் யாவருக்கும் உதவியாக பாட்டுக் கச்சேரிகள், பிரசங்கங்கள் ஏற்படுத்துகிறார்கள். இராப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களால் இணைக்கப்பட்ட கூட்டுறவு யூனியன் சங்க நிர்வாகம் புரியும் ஊழியர்களைத் தயாரிக்கவும், கூட்டுறவுப் பயிற்சி அளிக்கவும் கூட்டுறவுக் கலாசாலைகளை நடத்துகின்றனர்.

## மாதர் சங்கங்கள்

அயர்லாந்திலுள்ள மாதர்கள் ஒன்று கூடி அயர்லாந்து மாதர் கூட்டுறவுச் சங்கம் என்ற ஸ்தாபனத்தை 1906-ல் நிறுவினர். இதற்கு நாடெங்கும் 14 கிளை ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவை கல்வி பரப்புவதில் ஊக்கத்துடன் பல்வாறு வேலை செய்து வருகின்றன.



# தேசீய கூட்டுறவு பெடரேஷன்

நாடெங்கும் ஆங்காங்குள்ள சில தொழில்கள் விருத்திக்கு வரவேண்டுமாயின் அவையாவும் ஒன்று சேரவேண்டும். அப்பொழுது தங்கள் பொருள்களை விற்பனை செய்யவோ அல்லது உத்தம முறையில் பொருள் உற்பத்தி செய்யவோ, தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்ளவோ மிக அனுகூலம் ஏற்படும். சிறு வியாபாரிகள் நம்மை எதிர்த்து ஏமாற்ற முடியாது. உலக வியாபாரத்தில் தைரியமாக இறங்கி லாபமடையலாம். உற்பத்தி, கொள்வினை, கொடுப்பினை யாவையும் ஏராளமாகச் செய்தல் நலம். ஆகவே, நாட்டிலுள்ள சங்கங்கள் யாவும் ஒரு பெடரேஷனுடன் கூடி தொழில் செய்வது மிக நலம். சரக்குகளின் குணம் அதிகரிக்கும். தட்டாமல் வேண்டிய சமயத்தில் கிடைக்கும். மதிப்பும், நாணயமும் அதிகப்படும்.

இவ்வித நோக்கங்களுடன் 1897-ல் அயர்லாந்து கூட்டுறவு விவசாய ஏஜன்ஸி சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது மிகச் சிறிதாக இருந்தது. ஒரு காரியதரிசி, ஒரு குமாஸ்தா, ஒரு கையாள் ஆக மூவரே சிப்பந்திகள். அக்காலத்தில் விவசாயம் ஒன்றிலேதான் புதிதாய் உண்டான கூட்டுறவுச் சங்கங்கள் கவனஞ்செலுத்தின. ஆகவே, நல்ல உரமும், விதையும் சங்கங்களுக்கு வாங்கிக் கொடுப்பது மட்டுமே இதன் நோக்கமாயிருந்தது. மொத்தமாய் வாங்கிக் கொடுக்கவேண்டும். இதில் பல இடைஞ்சல்கள் உண்டு. தவிரவும் இந்த ஏஜன்ஸி சங்கத்திற்கு கைமுதலும் இல்லை. இவ்வளவு கஷ்டங்கள் இருந்தும் இந்த சங்கம் விவசாய கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிக உதவி செய்தது.

மேலே கண்ட இடையூறுகளை நீக்கி சங்கத்தின் தொழிலை விரிவு படுத்தவேண்டுமென்பது மறு வருஷத்திலேயே தெளிவாயிற்று. ஆகவே, 1898-ல் இச்சங்கம் அயர்லாந்து மொத்த வியாபாரச் சங்கம் என மாற்றப்பட்டது. அதன் பொறுப்பும் அதிகாரமும் விரிக்கப்பட்டன. அயர்லாந்தெங்கும் கூட்டுறவு முறையைப் பல வித்திலும் பரப்புவதற்கு ஏற்ப எவ்வித பொருள்களையும் மொத்தமாய் வாங்கவும், மொத்தமாகவோ அல்லது சில்லரையாகவோ அங்கத்தினர்களுக்கு விற்கவும், நாணயம், ஏற்றுமதி, இறக்குமதி, இன்ஷியூரன்ஸ், கைத்தொழில், வியாபாரம் முதலியனவற்றிற்கு உதவி செய்யவும் பொறுப்பும் அதிகாரமும் அளிக்கப்பட்டது. இத்தொழில்களுக்கு வேண்டியவாறு நிலங்களை வாங்கவோ, விற்கவோ, வாடகைக்கு விடவோ, கட்டிடங்கள் கட்டவோ, ரிப்பேர் செய்யவோ சகல அதிகாரங்களும் இச்சங்கத்திற்கு அளிக்கப்பட்டது.

இத்துடன் இணைக்கப்பட்ட சங்கங்கள் யாவும் இத்துடன் வியாபாரம் செய்தன, முதல் வருஷத்தில் 25 சங்கங்கள் இதில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தன. 30 ஆயிரம் பவுன் பெறுமான வியாபாரம் செய்தன. முதலில் இந்த பெடரேஷன் கால்நடைகளை ஏற்றுமதி செய்ய முயற்சித்தது. இதில் மிக நஷ்டம் ஏற்பட்டது. ஆயினும், உள்நாட்டில் முதலில் தகுந்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்ற அனுபவத்தை அடைந்தது. இது பின்னர் ஜாக்கிரதையாக இத்தொழில் செய்ய முற்பட்டது.

இத்துடன் விவசாயத்துக்கு வேண்டிய பொருள்களை மொத்தமாய் வாங்கி சில்லரையாய் கொடுக்கும் முயற்சி செய்தது. தொழில் செய்வதற்கு மத்திய இடமாக ஓர் ஸ்தலம் வாங்கிற்று. விவசாயிகளுக்கு விதையின் சுத்தத்தையும் முளைக்கும் சக்திக்கும் உத்திரவாதம் [illegible] விவசாயிகளுக்கு வேண்டிய கருவிகளை வாங்கி அளித்தது. உரங்களை மொத்தமாய் கவனத்துடன் வாங்கி உரத்தின் குணத்தை உயர்த்தி விலையைக் குறைத்தது. இவ்வாறு உரம் வாங்கி விற்றதில் ஓர் முறை 5000 பவுன் லாபம் கிடைத்தது. டொனிக்கல் என்ற இடத்தில் உள்ள சங்கங்கள் இம்முறை காரணமாக உரங்களுக்கு முன்னம் கொடுத்த விலையில் பாதியே கொடுக்கலாயின. இவ்வாறு பெடரேஷன் மொத்தமாய் பொருள்களை வாங்கி விற்பதில் யாவருக்கும் நன்மை ஏற்படவே பெடரேஷனது தொழில் விரைவாய் பல விதத்திலும் விருத்தி அடைந்து வருகின்றது. 1905-ல் 54 சங்கங்கள் அங்கத்தினர்களாயிருந்தன. 1909-ல் முதல் பெடரேஷன் விரிவு பெற்றது.

14732

# கிருஷிகளும் கடன் சுமையும்

## விவசாயிகள் உய்யும் வழி என்ன?

திரு. தேவதார் மருந்து

திரு. ஜி. கெ. தேவதார் ஆகஸ்ட் மீ 3, 4 தேதிகளில் எர்ணுக்குளம் மகாராஜா காலேஜ் மண்டபத்தில், காலேஜ் கூட்டுறவு சங்கத்தின் ஆதரவில் "கடன் சுமை" என்பது குறித்து நிகழ்த்திய சொற் பொழிவின் சாரம் பின்வருமாறு:—

ஒரு நாட்டின் விவசாயிகளது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பது கடன் சுமையேயாகும். லேவாதேவி புரியும் ஒரு கூட்டத்தார் நாட்டில் இருப்பது கிருஷிகளின் கடன் சுமையைப் பெருக்குவதாக இருக்கிறது. திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்கள் கல்விநிலையிலும் சமுதாய மேம்பாட்டிலும் பெரிதும் முன்னேற்றமடைந்திருக்கிறது. எனினும், இவ்விரு சமஸ்தான பிரஜைகளும் கடனிலேயே ஆழ்ந்து கிடக்கின்றனர். இம்மாதிரியான கடன் பெருக்குக்குக் காரணமென்ன? துரதிருஷ்ட வசமாக நம் நாட்டு மக்கள் பழக்க வழக்கத்திற்கு அடிமைகளாக இருக்கின்றனர். அதனால் அவர்கள் லேவாதேவிக்காரர்கள் உதவியை நாடவும், வாங்கும் பணத்தை விரயம் செய்யவும் நேரிடுகிறது. இம்மாதிரியான வீண் செலவும், வீண் செலவுக்காக வாங்கும் பணத்திற்கு செலுத்தவேண்டிய வட்டியும் கடனை அதிகரிக்கச் செய்கிறது. கடன் சுமையைக் குறைப்பதென்றால் கிருஷிகளை ஜாதிக்கொடுமையிலிருந்து விடுவிக்கவேண்டும். இதன் பொருட்டு பாஞ்சாலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களின் நோக்கம் வீண் செலவைக் குறைப்பதேயாகும். இச்சங்கத்தின் அங்கத்தினர்கள் ஓர் குறிப்பிட்ட வயதை அடையும் வரையில் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாதென தடுக்கப்படுகின்றனர். மேலும், விசேஷ காலங்களில் ஓர் குறிப்பிட்ட தொகைக்கு மேல் அதிகமாக, செலவு செய்யக்கூடாதென கட்டாயப்படுத்தப்படுகின்றனர். நிற்க, கடன் சுமையைக் குறைக்க கிருஷிகளின் வருமானத்தைப் பெருக்கவேண்டும். அதற்கேற்ற வழி நிலத்தின் விளையும் சக்தியை விருத்தி செய்வதாகும். நாளுக்கு நாள் நிலத்தின் விளையும் சக்தி குறைந்து வருகிறது. நவீன முறையைக் கையாண்டு அதனை விருத்திசெய்ய முற்படுவது அவசியமாகும். நான் செல்லுமிடங்களிலெல்லாம் ஓர் விஷயத்தில் கவனத்தைச் செலுத்துகிறேன். அதன் மூலம் எனக்குத் தெரிய வருவதென்னவென்றால் சேமித்து வைப்பதென்ற பழக்கம் நம்மவரிடம் கிடையாது. ஆனால் கடன் வாங்கும் பழக்கம் மாத்திரம் பெருகிக்கொண்டே வருகிறது.

கிருஷிகளின் கடன் சுமையைக்குறைக்க ஓர் வழி நில அடமான பாங்குகள் நிறுவுவதாகும். கூட்டுறவு நாணயச்சங்கங்கள் சாதாரணமாக கடன்காரர்களுக்குத் தற்காலீக உதவி புரியக்கூடும். ஆனால், நில அடமான பாங்குகள்தான் கிருஷிகளுக்கு சாசுவதமான நன்மை புரியக்கூடும். இப்பாங்கினுக்கு சர்க்கார் உதவிபுரிதல் வேண்டும். முதல் முதலாக ஜனங்களின் கடன்

---

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

1909-ல் விவசாயப் பொருள்களுடன் கோழி முட்டை சேகரித்து விற்றுக் கொடுக்கும் தொழிலும் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு, கோழி, பன்றி, தேன் முதலியவற்றை விற்றுக்கொடுக்கவும், கிராமவாசிகளுக்கும் நகர வாசிகளுக்கும் தேவையான பொருளை விற்கவும் முற்படலாயிற்று. வெண்ணைச் சாலைகளுக்கு வேண்டிய யந்திரங்கள் கருவிகள் பெடரேஷனாலேயே உற்பத்தி செய்யப்பட்டு நாடெங்கும் அளிக்கப்படுகின்றன. இவ்வித பால் கடையும் யந்திரங்கள் இங்கிலாந்துக்குக்கூட ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு பெடரேஷன் அயர்லாந்தில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் ஆதாரமாய் இருந்து வருகிறது.



# சுதேச சமஸ்தானத்தில் கூட்டுறவு இயக்கம்

## திருவாங்கூர் முன்னேற்றம்

### கொச்சி மாதர்கள் நிலைமை

திருச்சூர் மாதர் சங்கத்தின் ஆதரவில் ஆகஸ்ட் மீ 19-உ திரு. ஜி. கெ. தேவதார் "மாதரும் கூட்டுறவு இயக்கமும்" என்ற பொருள்படும்படி நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் பின்வருமாறு:—

ஆண்களைப்போன்று மாதர்கள் சம உரிமை பெற விரும்புவார்களாகில் பொது வாழ்வில் அவர்கள் ஈடுபடவேண்டும். அதன் மூலம் வாக்குரிமை பெறவேண்டும். கடந்த மகா யுத்த காலத்தில் ஆங்கில மாதர்கள் செய்துள்ள அரிய சேவையை இது சமயம் உங்கள் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். கூட்டுறவு இயக்கம் மேல் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவி புரிந்துள்ளது. நம் நாட்டிலும் சென்ற 25 ஆண்டுகளாக கூட்டுறவு இயக்கம் அளவிடற்கரிய நன்மை புரிந்துள்ளது. இம்மாதிரியான ஓர் சிறந்த இயக்கத்தில் மாதர்கள் போதிய அளவு பங்கெடுத்துக் கொள்ளாமைக்கு விசனிக்கிறேன். இங்குள்ளவர்களைப்போன்று மேல் நாட்டு மாதர்கள் உறங்கவில்லை. அந்நாடுகளில் கூட்டுறவு இயக்கத்தின் விருத்திக்கு மாதர்களே மூல புருஷர்களெனலாம். திருவாங்கூரிலுள்ள மாதர்கள் கொச்சியிலுள்ள சகோதரிகளைக்காட்டிலும் சிறிது அக்கரையுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். திருவாங்கூரைக்காட்டிலும் கொச்சியில் பெண் கல்வி அதிகமாக இருந்தும் இங்குள்ள மாதர்கள் கூட்டுறவு இயக்கத்தில் சிரத்தைக் குறைவுடன் இருப்பது அதிசயமாக இருக்கிறது. இனியாவது நீங்கள் யாவரும் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்குப்பாடுபடமுன் வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். கொச்சி சமஸ்தானத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாக இருப்போர் எண்ணிக்கை 25,000. இவர்களில் 1500 பேர் மாதர்கள், 100-க்கு 5 விகிதம் இருக்கின்றனர். ஆனால் திருவாங்கூரில் கூட்டுறவு ஸ்தாபனங்களில் அங்கத்தினர்களாக இருப்போர் எண்ணிக்கை 100-க்கு 13 விகிதம் இருக்கிறது. எனவே, இனியாவது கொச்சி மாதர்கள் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு உழைப்பார்களென நம்புகிறேன்.

---

## கிருஷிகளும் கடன் சுமையும்

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

எவ்வளவென்பதையும் சொத்தின் பொறுமானத்தையும் பரிசீலனை செய்து அதற்குத் தக்கவாறு தேவையான பணத்தை பங்குத்தொகையின் மூலம் திரட்டவேண்டும். சர்க்கார் உத்திரவாதமளிக்கும் பக்ஷத்தில் பங்குத்தொகையின் மூலம் பொருள் திரட்டுவதும் சுலபமாக முடியும்.

மேல் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் நிலையைக் குறித்து கவனஞ் செலுத்தினால் பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பீடிக்கப்பட்டிருப்பது தெரியவரும். ஆனால், அந்நாடுகளில் கூட்டுறவு இயக்கத்தில் க்ஷீணமேற்படவில்லை. இந்தியாவில் உள்ளதைப் போன்று தவணை கடந்த பாக்கி அதிகரிக்கவில்லை. இந்தியக் கடன் சுமைக்குள்ள பல காரணங்களில் உலகெங்கும் பரவியுள்ள பொருளாதார நெருக்கடியை ஒன்றாகக் கூறலாம். பொது ஜனங்கள் தங்கள் நாணயத்தைக் காப்பாற்றுவதில் அக்கரைகாட்டவேண்டும். சமஸ்தானத்திலுள்ள சங்கங்கள் 100-க்கு 75 முதல் 90 வரை தவணை கடந்த பாக்கியுள்ளவாக இருக்கின்றன. எனக்கு இது ஓர் ஆச்சரியமாகவே இருக்கிறது. தேங்காயின் விலை குறைந்திருப்பது உண்மையே. ஆனால், நாணயமாக இருக்கவேண்டுமென ஜனங்கள் விரும்புவார்களாகில் அவ்வாறே நடந்து கொள்ளலாம். வந்தநிமைக்கு எல்லாம் காரணம் கூட்டுறவு இயக்கத்தின் உண்மையான தத்துவத்தை மக்கள் அறிந்துகொள்ளாததேயாகும்.

# மத்திய பாங்கு கமிட்டியார் சிபார்சுகள்

## சென்னை சர்க்கார் அபிப்ராயம்

மத்திய பாங்கி விசாரணைக்கமிட்டியார் கூட்டுறவு இயக்கம் சம்பந்தமாக பல சிபார்சுகள் செய்திருக்கின்றனர். அது குறித்து சென்னை அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள அபிப்ராயம் பின்வருமாறு:—

### கடனும் கிராமவாசிகளும்

கிராமவாசிகள் கடனால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். மாகாணவாரியாக பிரத்தியேக உத்தியோகஸ்தர்களை சர்க்கார் நியமிக்கவேண்டும். அவர்கள் கடன்கொடுத்தோர் வாங்கியோர் ஆகிய இரு சாராரிடையேயும் தீவிர பிரசாரம் செய்ய வேண்டும். கடன்பட்டோரை ஓர் குறிப்பிட்ட தொகையை ரொக்கமாகக் கொடுத்தோ அல்லது ஓர் குறிப்பிட்ட காலத்தில் கொடுக்கும்படி செய்தோ கடன் தொல்லையை ஒழிக்க முற்படவேண்டும். இம்மாதிரியான ஏற்பாடுகள் செய்யப்படும் பக்ஷத்தில் அதற்கு கூட்டுறவு பாங்குகள் கடன் கொடுத்து உதவலாம் என்பதாக பாங்கிக் கமிட்டியார் கூறியுள்ளனர். இச்சிபார்சினை எந்த அளவு ஏற்கலாம் என தெரிவிக்குமாறு சட்ட இலாகாவுக்கும் கூட்டுறவு ரிஜிஸ்திராருக்கும் பரிசீலனை செய்யுமாறு சர்க்கார் அனுப்பியுள்ளனர்.

### குறுகிய கால தவணை

பிரதம நாணயச் சங்கங்கள் குறுகிய கால தவணையில் தான் கடன் கொடுக்கவேண்டுமேயன்றி நீண்டநாள் தவணையில் கடன் கொடுக்கக்கூடாதென்பது கமிட்டியார் சிபார்சாகும். இச்சிபார்சின்படிதான் தற்சமயம் பிரதமச் சங்கங்கள் குறுகிய கால கடன் கொடுத்து வருகின்றனவென்றும், நீண்டகால கடன்கள் நில அடமான பாங்குகளால் கொடுக்கப்படுகிறதென்றும், சர்க்கார் அபிப்பிராயப்படுகின்றனர்.

### விசேஷ கூட்டுறவுச் சங்கங்கள்

லேவாதேவி புரியாத விசேஷ கூட்டுறவுச் சங்கங்கள் விருத்தி அடைய வேண்டுமென்பது கமிட்டியாரின் நோக்கம். இத்துறையில் வேண்டிய முயற்சி 1924-ம் வருஷம் எடுக்கப்பட்டதாகவும், ஆனால் போதிய அளவு வெற்றி பெறுவதற்கில்லை என்றும், எனினும் மீண்டும் தேவையான வேலைகள் நடைபெறுவதாகவும், கொஞ்சம் கொஞ்சமாக வெற்றி ஏற்படக் கூடுமென எதிர்பார்ப்பதாகவும் சர்க்கார் கருதுகின்றனர்.

### விவசாயப் பொருள் விற்பனை

விவசாயப் பொருள்களை விற்பனைபுரிய கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதாக கமிட்டியார் சிபார்சு செய்துள்ளனர். இது விஷயத்தில் சர்க்கார் அக்கரை கொண்டிருந்தாலும் தானியங்களை பாதுகாப்புடன் வைக்க கிட்டங்கிகளை ஏற்படுத்த தயாராக இல்லை என்பதாகவும்; அதற்கு பொருளாதாரம் இடங்கொடுக்கவில்லை என்றும் சர்க்கார் தெரிவிக்கின்றனர்.

### மேம்பார்வை

கூட்டுறவு ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் சர்க்கார் உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளருக்கு சுதந்திரமளிக்கவேண்டும்; சர்க்கார் மேற்பார்வை புரியும் வேலையை குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதாக கமிட்டியார் அபிப்ராயப்படுகின்றனர். இந்த அபிப்ராயத்தை சர்க்கார் ஏற்கவில்லை. கூட்டுறவு இயக்கம் விருத்தி அடையவேண்டுமானால் சர்க்கார் இலாக்காவைச் சேர்ந்த கணக்குப் பரிசோதகர்கள் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்யவேண்டுமென சர்க்கார் கருதுகின்றனர்.

கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கென பிரசாரம் செய்ய சர்க்கார் பொருளுதவி புரிய வேண்டுமென கமிட்டியார் கூறியதையும் சர்க்கார் புறக்கணித்து விட்டனர். நில அடமான பாங்குகள் நிறுவவேண்டியதின் அவசியத்தைக் குறித்து கமிட்டியார் வற்புறுத்திக் கூறியுள்ளதை சர்க்கார் கிரியாம்சத்தில் செய்து முடித்திருப்பதாகக் கருதுகின்றனர்.



# கொச்சி சமஸ்தானமும் கூட்டுறவு இயக்கமும்

## குறைகளும் அவற்றினை நீக்கும் மார்க்கமும்

### திரு. தேவதார் கூறும் யோசனை

கொச்சி சமஸ்தானத்தில் கூட்டுறவு இயக்கத்தின் நிலைமை குறித்து விசாரணை நடத்திய திரு. ஜி. கெ. தேவதார் சுமார் 60 கூட்டுறவுச் சங்கங்களுக்கு விஜயஞ்செய்துள்ளார். கூட்டுறவு இயக்கத்தைப்பற்றி கூட்டங்கள் பலவற்றில் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். சமஸ்தானத்தில் பிரபல கூட்டுறவாளர்களைக் கண்டு பேசியுள்ளார். இம்மாதிரி பலவகையிலும் அவர் நடத்திய விசாரணையின் மூலம் அறிந்த சில உண்மைகளைக்கொண்டு சமஸ்தானத்தில் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கான சில முறைகளைக் குறிப்பிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரிவதாவது:—

திருச்சூரில் அமைக்கப்பட்டிருக்கும் மத்திய கூட்டுறவு நிலையம் கூட்டுறவு பிரசாரம் செய்து வருகிறது. அது நடத்தப்படும் முறை திருப்திகரமாக இல்லை. சமஸ்தானத்தில் 250 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. இவற்றினில் 60 சங்கங்கள் கூட்டுறவு நிலையத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி பல சங்கங்கள் இணைக்கப்படாமலிருப்பது உசிதமல்ல. கட்டாய முறையை அனுஷ்டித்தாவது, சகல சங்கங்களையும் கூட்டுறவு நிலையத்தில் இணைக்க வேண்டும். கூட்டுறவு நிலையத்திற்கு திவானை உபபோஷகராகக் கொள்ள வேண்டும். உத்தியோகப்பற்றற்ற ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கூட்டுறவு நிலையத்தில் சங்கங்களும் யூனியன்களும் இணைக்கப்பட்டிருப்பது அவசியம். யூனியன்கள் மத்திய நிலையத்தின் பிரதிநிதி சபையாக இருந்து குறிப்பிட்ட எல்லைக்குள் வேலை செய்தல் வேண்டும். சர்க்கார் தற்போதுள்ளதைவிட அதிகமான பொருளுதவி புரிதல் வேண்டும்.

மாதர்கள் எந்த அளவுக்கு கூட்டுறவு இயக்கத்தில் அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்கு எடுத்துக்கொள்ளவில்லை. மாதர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கும் பொருட்டு சிலரை பிரசாரகர்களாக நியமிக்க வேண்டும். சிலருக்கு இன்ஸ்பெக்டர் பதவி அளிக்க வேண்டும். உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளரை கௌரவ உத்தியோகஸ்தர்களாக நியமித்து இயக்கத்தை விருத்தி செய்ய வேண்டும். புத்தகாலயங்கள் நிறுவவும், பிரசாரம் புரியவும் சர்க்கார் உதவி புரிய வேண்டும். கூட்டுறவு நிலையத்தின் காரியாலயத்திற்குத் தேவையான கட்டிடத்தை சர்க்கார் கொடுத்து உதவ வேண்டும்.

### மத்திய பாங்கு

சமஸ்தானத்தின் மத்திய பாங்கிற்கு மூன்று கமிட்டிகள் இருக்க வேண்டும். ஒரு கமிட்டி குறுகிய கால கடன் சம்பந்தமாக நிர்வாகம் நடத்த வேண்டும். குறுகிய கால கடன் என்பது இரண்டு வருடத்திற்குள்ளாதாக இருப்பதாகும். இதற்கென சுமார் 10 லெட்ச ரூபாய் ஒதுக்கப்பட வேண்டும். மற்றும் ஓர் கமிட்டி நடுத்தரக்கடன் சம்பந்தமாக நிர்வாகம் புரிதல் வேண்டும். நடுத்தரக்கடனென்பது 5 வருஷங்களுக்குக் குறையாமலும், 10 வருடங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். இதற்கென 5 லெட்ச ரூபாய் ஒதுக்கப்படவேண்டும். மூன்றாவதாக நீண்டகால கடனுக்காக ஒரு கமிட்டியும், அதற்கென 25 லெட்ச ரூபாயும் இருக்க வேண்டும். இம்மாதிரி தேவையான பணம் யாவும் சர்க்கார் உத்திரவாதமுள்ள பத்திரங்களை விற்பதின் மூலமோ அல்லது சர்க்கார் உதவியைக்கொண்டோ தயாரிக்கலாம். மத்திய பாங்கு தாலுக்கா பாங்குகளுக்கு பொருளுதவி புரிய வேண்டும். ஒவ்வொரு தாலுகா பாங்கும் 50 சங்கங்களுடனோ அல்லது அதற்குமேல் கூடுமான சங்கங்களுக்கோ பொருளுதவு புரிய

(18-ம் பக்கம் பார்க்க.)

# மத்திய கூட்டுறவுக் கல்லூரி

## சென்னையில் அமைக்கப்படும்

### சர்க்கார் அபிப்ராயம்

#### அறிக்கை 1

கூட்டுறவுக் கல்வி அளிப்பது சம்பந்தமாக தற்போதுள்ள முறையில் சில மாறுதல் உண்டு பண்ணி மத்தியக் கூட்டுறவு கல்லூரி ஒன்றை அமைப்பது குறித்து சென்னை சர்க்கார் அபிவிருத்தி இலாக்கா ஜூன்-மீ 10-உ அறிக்கையொன்று வெளியிட்டது. அதில் கண்டுள்ளதாவது :—

சென்னை சர்க்கார் கூட்டுறவு இலாக்காவுக்கு உத்தியோகஸ்தர்களாக எடுத்துக் கொள்ளப்படுவோருக்கு கூட்டுறவு பாங்கி முறை, கணக்குகள் தணிக்கை செய்தல் முதலிய பயிற்சியை உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளரின் நிர்வாகத்தில் இருந்து வந்த பயிற்சிசாலைகள் அளித்து வந்தன. இம்மாதிரியான போதனா சாலைகள் தமிழ் நாட்டில் மூன்றும், ஆந்திர நாட்டில் மூன்றும் இருந்து வருகின்றன. இவை யாவும் தேவையா? இவற்றில் அளிக்கப்படும் பயிற்சி போதியதாகுமா? என்பது குறித்து கவனஞ் செலுத்தப்பட்டது. சட்ட சபை அங்கத்தினர்கள் பெரும்பாலும் நிறைந்த ஆலோசனைக்கமிட்டியார் சர்க்கார் சேவைக்கென தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு நல்ல பயிற்சி அளிக்க வேண்டுமென்றும், அதற்கென ஓர் மத்தியக் கூட்டுறவுக் கல்லூரி இருத்தல் நலமென்றும், அக்கல்லூரி கூட்டுறவு இலாக்காவின் நிர்வாகத்தில் இருக்க வேண்டுமென்றும், சாதாரணமாக பாங்குகள், யூனியன்கள், பெடரேஷன்கள் ஆகியவற்றினுக்குத் தேவையான ஊழியர்கள் உத்தியோகப்பற்றற்றவர்கள் நிர்வாகத்தில் இருந்துவரும் போதனா சாலையில் பயிற்சி பெறலாமென்றும் அபிப்ராயம் கொடுத்தனர். இதனை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

#### அறிக்கை 2

கூட்டுறவு இலாக்கா ரிஜிஸ்திரார் மத்திய கூட்டுறவுக்கல்லூரி அமைப்பு சம்பந்தமாக ஜூலை-மீ 29-உ வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு:-

கூட்டுறவுக் கல்வி அளிக்கும் பொருட்டு மத்திய கூட்டுறவுக் கல்லூரி ஒன்றை சென்னையில் அமைப்பதென சர்க்கார் முடிவு செய்துள்ளனர். கல்வி அளிக்கப்படும் காலம் 10 மாதமாகும். சர்க்கார் சேவைக்கு அருகதையுடையவர்கள் தான் இத்தக் கல்லூரியில் அனுமதிக்கப்படுவர். வருடமொன்றுக்கு 50 மாணவர்களுக்குத்தான் இடமுண்டு.

இக்கல்லூரியில் கல்விப் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் படிப்பைப் பூர்த்தி செய்ய ஏக காலத்தில் ரூ. 40 ஆகவோ அல்லது ரூ. 20 விகிதம் இரு முறையாகவோ துவக்கத்திலேயே செலுத்தவேண்டும்.

கூட்டுறவு ரிஜிஸ்திராரின் நிர்வாகத்தின் கீழ் கல்லூரி நடைபெறும்.

#### அறிக்கை 3

மத்திய கூட்டுறவு கல்லூரி அமைப்பு குறித்து சென்னை சர்க்கார் ஆகஸ்ட்-மீ 2-உ வெளியிட்டுள்ள அறிக்கை பின்வருமாறு :—

சென்னை மாகாணத்தில் தற்சமயம் 6 கூட்டுறவுக் கல்லூரிகள் இருக்கின்றன. இவற்றினுக்கு சர்க்கார் பொருளுதவி புரிந்து வருகின்றனர். கூட்டுறவு போதனா சாலைகளின் எண்ணிக்கையை தேவையை அனுசரித்துக் குறைத்து திறமையானவர்களைக் கொண்டு நிர்வாகத்திறமையை மேம்படச் செய்வது நலமென 1930-ம் வருடமுதல் சர்க்கார் ஆலோசனை செய்து வந்த



னர். ஆனால், போதனாசாலையைச் சேர்ந்தோர் சர்க்கார் யோசனையை அமுலுக்குக் கொண்டுவரின் தாங்கள் பாதிக்கப்படக்கூடுமென்றதால் எண்ணிக்கையைக் குறைக்காமல் பொருளுதவியைக் குறைக்கலாயினர். 1931-ல் சிக்கனக் கமிட்டியார் கூட்டுறவு போதனாசாலைகள் மூன்றுக்கு மேல் சர்க்கார் பொருளுதவி புரிவது கூடாதென சிபார்சு செய்துள்ளனர். அவ்வாறு பொருளுதவி செய்வதென்றால் இருந்துவரும் 6 போதனா சாலைகளில் எந்த மூன்றுக்குப் பணங் கொடுப்பதென்பதை நிர்ணயிப்பது கஷ்டமாக இருந்தது.

1932-ல் கூட்டுறவு ரிஜிஸ்திரார் இரு வழிகளைக் காண்பித்தார். கூட்டுறவாளர்கள் தேவைக்குமேல் அதிகமான கூட்டுறவுப் போதனா சாலைகள் பயனற்றவை என்பதை உணரும் காலம் கிட்டும் வரையில் நான்கு போதனா சாலைகளுக்கு சர்க்கார் பொருளுதவி பரியலாம். அன்றேல் மத்திய கூட்டுறவுக் கல்லூரி ஒன்றை சென்னை மாகாண கூட்டுறவு யூனியனது ஆதரவில் நடத்தினால் நலம் என்பதை கூட்டுறவாளர் அறியுமாறு செய்யவேண்டும். மத்திய கூட்டுறவு பாங்கு கமிட்டியார் மத்தியக் கூட்டுறவுக் கல்லூரி அமைக்கவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திக்கூறி இருக்கின்றனர். அக்கல்லூரி உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவாளரால் நடத்தப்படவேண்டுமென்றும், சர்க்கார் பொருளுதவி புரியவேண்டுமென்றும் அவர்கள் கூறியுள்ளனர். இது குறித்து சர்க்கார் பரிசீலனை செய்தனர். சென்னை மாகாண கூட்டுறவு யூனியன் ஓர் திட்டம் சமர்ப்பித்தது. தற்போது 6 போதனா சாலைகளுக்குப் பொருளுதவி புரியதுடன் மத்திய கூட்டுறவுக் கல்லூரிக்கும் உதவியளிக்க வேண்டுமென்று யூனியன் செய்துள்ள சிபார்சை பொருளாதார நெருக்கடி காரணமாக சர்க்கார் ஏற்பதற்கில்லை.

வேலை இல்லாத் திண்டாட்டம் மிகுந்துள்ள இந்தக் காலத்திலே 6 போதனாசாலைகள் இருப்பது அனாவசியமென்றே சர்க்கார் கருதுகின்றனர். ஆலோசனைக் கமிட்டியாரைக் கலந்ததில் அவர்களும் அதே அபிப்ராயப்பட்டனர். அதன் பேரில் ரிஜிஸ்திராரை ஓர் திட்டம் தயார் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர் மத்தியக் கல்லூரி நிறுவுதல், தற்போதுள்ள போதனா சாலைகளைக் குறைத்தல் முதலியது சம்பந்தமாக ஓர் திட்டம் தயாரித்து சர்க்காருக்கு சமர்ப்பித்தார். அத்திட்டம் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

ரிஜிஸ்திரார் கூறியுள்ள பிரகாரம் சென்னையில் மத்திய கூட்டுறவுக் கல்லூரி நிறுவப்படும். அதற்கென வாடகைக் கட்டிடமொன்று எடுக்கப்படும். கல்லூரி ரிஜிஸ்திரார் மேம்பார்வையில் நடந்துவரும். இக்கல்லூரிக்கு மாதமொன்றுக்கு ரூ. 100 சம்பளத்தில் ஒரு பிரின்ஸ்பாலும், இரு ஆசிரியர்கள், முறையே ரூ. 70, ரூ. 50 விகிதம் மாதச் சம்பளத்திலும், ரூ. 30 சம்பளத்தில் ஒரு குமாஸ்தாவும், ரூ. 12 சம்பளத்தில் இரு வேலைக்காரர்களும் உண்டு. கட்டிட வாடகைக்கென ரூ. [illegible]00 அனுமதிக்கப்படும். முதல் வருடத்தில் மேஜை நாற்காலி முதலிய சாமான்கள் வாங்க ரூ 750 அளிக்கப்படும். ஆகமொத்தத்தில் 1931—35-ல் கல்லூரிக்கென சர்க்கார் ரூ. 5600 செலவு செய்வார்கள். இக்கல்லூரியில் உயர்தரப் பயிற்சியே அளிக்கப்படும். அதாவது, சர்க்கார் சேவை புரிய விரும்புவோரே இதில் பயிற்சிபெற அனுமதிக்கப்படுவர்.

#### சாதாரண பயிற்சிக்கூடங்கள்

சாதாரண கூட்டுறவு பாங்குகள், யூனியன்கள் பெடரேஷன்கள் ஆகியவற்றிற்கு தேவையான சிப்பந்திகளுக்கு பயிற்சி அளிக்க இரு கல்லூரிகள் இருந்துவரும். ஒன்று ஆந்திர நாட்டிலும், மற்றொன்று தமிழ் நாட்டிலும் நடத்தப்படும். தற்சமயம் கல்லூரி நடைபெற்ற இடங்களில் ஓர் இடத்திற்கு ஓர் முறையாக அந்த இடங்களில் பயிற்சி அளிக்கப்படும். இப்பயிற்சிக் கூட்டங்கள் சென்னை மாகாண கூட்டுறவு யூனியனது மேம்பார்வையில் நடைபெறும். மாணவர் பயிற்சி பெறுங்காலம் 5 மாதமாகும். ஒரு வருடத்தில் இரு முறை பயிற்சி அளிக்கப்படும். வருஷந்தோறும் இரண்டு முறை இரண்டு இடங்களில் தமிழ் நாட்டிலும் ஆந்திர தேசத்திலும், பயிற்சி அளிக்கப்படும். 10 வது பாங்குகள், யூனியன்கள், பெடரேஷன்கள் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களும்

ஆகியவற்றில் சேவையிலுள்ளவர்களாவது இப் பயிற்சிக் கூடங்களில் அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு பயிற்சிக் கூடத்திலும் ஒரு தடவைக்கு 40 மாணவர்கள் அனுமதிக்கப்படுவர். ஒரு மாணவருக்கு ரூ. 20 கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

இப்பயிற்சிக் கூடங்கள் ஓர் சூப்பிரண்டின் பார்வையில் நடைபெறும். அவர் ஓர் சப் டிப்டி ரிஜிஸ்திராராக இருப்பார். அவரது சம்பளம் போக்கு வரத்துச் செலவுகள் சர்க்காரால் ஏற்கப்படும். மேலும் இரு ஆசிரியர்கள் ரூ. 55 மாதச் சம்பளத்தில் நியமிக்கப்படுவர். இவர்களது சம்பளமும் சர்க்காரால் கொடுக்கப்படும். இதற்கென 1934—35-ஆம் சர்க்கார் ரூ. 2400 ஒதுக்கியுள்ளனர். மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பணத்தை போதனா சாலையின் பரிபாலனத்திற்கும். கட்டிட வாடகை, குமாஸ்தா, சில்லரை ஆட்கள் சம்பளம் முதலியனவற்றிற்கும் செலவு செய்யப்படும்.

மத்திய கல்லூரியும், சாதாரணப் பயிற்சிக் கூடங்களும் தற்காலிகமானவை. எனவே, சர்க்கார் ஒரு வருட செலவையே அனுமதியளித்திருக்கின்றனர். நிரந்தரமாக ஓர் கல்லூரி அமைப்பதென்றால் திருப்திகரமான ஓர் திட்டம் தயாரிக்கப்பட்டு சர்க்கார் பார்வைக்கு வருமானால், அது திருப்திகரமாக இருக்குமானால் அங்கீகரிக்கப்படும்.

## கோச்சியும் கூட்டுறவு இயக்கமும்

(15-ம் பக்கத் தொடர்ச்சி.)

லாம். சர்க்கார் தாலுகா பாங்குகளுக்கு பொருளுதவி புரியின் அது விரும்பத்தக்கதே. அவ்வாறு சர்க்கார் கொடுக்கும் கடன்களுக்கு முதல் ஐந்து வருடங்களுக்கும் வட்டி இருத்தல் கூடாது. அடுத்தபடியாக இரண்டு வருடங்களுக்கு 100-க்கு 5 விகிதம் வட்டி விதிக்கப்பட வேண்டும். மத்திய பாங்கு தாலூக்கா பாங்குகளுக்குக் கொடுக்கும் பணத்திற்கு வட்டி 100-க்கு 2 விகிதத்திற்கு மேல் லாபம் இருக்கக் கூடாது. எனவே, மத்திய பாங்கு தாலூக்கா பாங்குகளுக்கு 100-க்கு 7 விகிதம் வட்டிக்குக் கொடுத்தால் அவை பிரதம சங்கங்களுக்கு 100க்கு 9 விகிதமும், அச்சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு 100-க்கு 11 விகிதமும் கொடுப்பதே நல்லது. தவணை கடந்த பாக்கிகளுக்கு தற்போது விதிக்கப்படும் வட்டி மிகவும் அதிகமெனலாம். அதனைக் குறைத்தல் அவசியம்.

### கிராமப் புனருத்தாரணம்

நிற்க, கிராமச்சீரமைப்பு வேலை, குடிசைத் தொழில் ஆகியவற்றினுக்கு சர்க்கார் தாராளமாக பொருளுதவி புரிய வேண்டும். விளைபொருள்களை விற்பனை செய்யுய உத்தியோகஸ்தர் நியமிக்கப்படவேண்டும். வீடமைப்புச் சங்கங்கள் அமைக்கப்படவேண்டும். கூட்டுறவு இன்ஷியோரன்ஸ் சங்கத்தை நிறுவவேண்டும். சிக்கன சங்கங்கள் ஆரம்பிக்கவேண்டும்.

மேலும், கூட்டுறவு இலாக்கா முதன்மையான ஸ்தானத்தை அடையவேண்டும். சட்ட சபையில் கூட்டுறவு ரிஜிஸ்திராருக்கு அங்கத்தினர் பதவி அளிக்கப்படவேண்டும். அவரது சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும். அதன் மூலம் அப்பதவியைதிறமை சாலிகள் வகிக்க முன் வருமாறு செய்யவேண்டும்.



# அஷ்ட திக்கு

## மேட்டூர் அணை

மேட்டூர் அணை உலகிலுள்ள ஜலத்தேக்கம் யாவற்றினும் மிகப்பெரியதென சொல்லப்படுகிறது. இம்மாதிரியான ஓர் தேக்கம் தேவை என்பதாக சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னர் சர். ஆர்தர் காட்டன் வற்புறுத்திக் கூறியுள்ளார். அது குறித்து அடிக்கடி பேசப்பட்டாலும் 1925-ஆம் ஜூலை-மீ தான் கோஷன் பிரவு அவர்களால் அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது இந்நீர் தேக்கம் சுமார் 60 சதுரமைல் சுற்றளவுள்ளது. இந்நீர் நிலையினால் மொத்தத்தில் சாகுபடியாகக் கூடிய நிலம் ஒரு போகம் 1,00,000 ஏக்கரும், இருபோகம் 270,000 ஏக்கருமாகும். இந்நீர் தேக்கம் சுமார் 1,352,500 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் கொடுக்கும் சக்தியுள்ளது. மேலும், திடீரென ஏற்படும் வெள்ளப்பெருக்கைத் தடுக்க இது உதவுகிறது. உதாரணமாக இத்தேக்கம் 1924-ம் வருஷத்திற்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்டிருக்குமாகில் 1924-ம் வருஷத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் உண்டான நஷ்டத்தில் 100-க்கு 85 பங்கு குறைவாக இருந்திருக்கும். மேலும், இந்நீர் தேக்கத்தினால் 49,000 குதிரை வேகமுள்ள மின்சார சக்தி உற்பத்தியாகக் கூடுமென தெரிகிறது. பல புதிய தொழில்கள் உற்பத்தியாக மின்சார சக்தி உதவுகிறது.

இந்நீர் தேக்கத்தைக கட்ட சர்க்கார் 737·08 லெட்ச ரூபாய் அனுமதித்தனர். ஆனால் ஏற்பட்ட செலவு 680 லெட்ச ரூபாய். இதனைக் கட்ட பல யந்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. அதுபோன்ற யந்திரங்கள் இதுவரை எவ்வேலைகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த அணை உடையுமானால் திருச்சி தஞ்சை ஆகிய இரு ஜில்லாக்களும் அடியோடு மூழ்கி நாசமடையுமென்றும், அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை மகாயுத்த காலத்தில் உண்டான உயிர்ச்சேதத்திற்கும் பொருட்சேதத்திற்குமே ஒப்பிடவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

## எப்படி சாத்தியம்?

கிருஷிகளின் கடன் சுமை குறித்து எர்ணாகுளம் மகாராஜா கல்லூரி மண்டபத்தில் திரு. ஜி. கெ. தேவதார் நிகழ்த்திய சொற்பொழிவை பிரிதோரிடத்தில் காண்க. அவரது அருமையான சொற்பொழிவைக் குறித்து குறை கூற எவருக்கும் தைரியம் வராது. எனினும், இது சமயம் அவரது பேச்சின் ஒரு பகுதி அர்த்தமற்றதென்பதை நாம் குறிப்பிடாதிருப்பதற்கில்லை. "பொது ஜனங்கள் தங்கள் நாணயத்தைக் காப்பாற்றுவதில் அக்கரை காட்டவேண்டும். சமஸ்தானத்திலுள்ள சங்கங்கள் 100-க்கு 75 முதல் 90 வரை தவணை கடந்த பாக்கியுள்ளனவாக இருக்கின்றன. எனக்கு இது ஓர் ஆச்சரியமாகவே இருக்கிறது. தேங்காயின் விலை குறைந்திருப்பது உண்மையே. ஆனால் சுலபமாக இருக்கவேண்டுமென ஜனங்கள் விரும்புவார்களாகில் அவ்வாறே நடந்துகொள்ளலாம்", என திரு. தேவதார் கூறுகிறார். கொச்சி சமஸ்தானத்தில் தவணை கடந்த பாக்கி அதிகரித்திருப்பது ஒரு சமயம் திரு. தேவதாருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுமானால் அது சகஜமே. திரு. தேவதார் சர்வ தேசத்திலும் கூட்டுறவு இயக்க நிலையை அறிந்த பண்டிதராகையால் கொச்சியின் பிற்போக்கான நிலை அவருக்கு திகைப்பை உண்டுபண்ணலாம். "தேங்காயின் விலை குறைந்திருப்பது உண்மையே. ஆனால் நாணயமாக இருக்கவேண்டுமென ஜனங்கள் விரும்புவார்களாகில் அவ்வாறே நடந்துகொள்ளலாம்", என திரு. தேவதார் கூறுவதின் கருத்துதான் நமக்கு விளங்கவில்லை. இது எவ்வாறு சாத்தியமென்பதை அறிய விரும்புகிறோம். கிருஷிகள் என்னதான் கூட்டுறவுப் பண்டிதர்களாயினும் கையில் பணமில்லாவிட்டாலோ அல்லது விளைபொருள் நல்ல விலைக்குப் போகாவிட்டாலோ நாணயத்தைக் காப்பாற்றுவது எப்படி?


## மாதர்களும் கூட்டுறவு இயக்கமும்

கூட்டுறவு இயக்கத்தில் மாதர்கள் போதிய அளவு பங்கெடுத்துக் கொள்ளவில்லை என திரு. தேவதார் புகார் கூறுகிறார். இவ்விதம் இவர் புகார் செய்வது இது முதல் தரமன்று. இவ்வாறே திரு. தேவதார் பலமுறை கூறி வந்திருக்கிறார். திருவாங்கூரில் மாதர்கள் 100-க்கு 13 விகிதம் கூட்டுறவு இயக்கத்தில் சம்பந்தம் வைத்திருப்பதாகவும், கொச்சியில் 100-க்கு ½ விகிதமே இருப்பதாகவும், இது மிகவும் விசனிக்கத்தக்கதென்றும், திரு தேவதார் கூறுகிறார். மாதர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்கும் பொருட்டு சிலரைப் பிரசாரகர்களாக நியமிக்கவேண்டுமென்றும், சிலருக்கு இன்ஸ்பெக்டர் பதவி அளிக்க வேண்டுமென்றும் திரு. தேவதார் அபிப்ராயப்படுகிறார். திரு. தேவதார் கூறுவதுபோல் பாஞ்சாலத்தில் ஓர் அம்மையார் கூட்டுறவு இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டதாக அறிகிறோம். இந்திய மாதர்கள் டாக்டர்களாகவும், வக்கீல்களாகவும் உபாத்தினிகளாகவும் சேவை புரிய முன் வந்திருக்கின்றனர். சமீபத்தில் ஓர் மாது சென்னையில் போலீஸ் இன்ஸ்பெக்டராகவும் நியமிக்கப்பட்டார். இங்ஙனமிருக்க கூட்டுறவு இயக்க வளர்ச்சி கருதி மாதர்களை பிரசாரகர்களாகவும், இன்ஸ்பெக்டர்களாகவும் நியமிப்பது விரும்பத்தக்கதே. மேலும் மாதர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தனித்ததோர் கல்லூரி அமைத்தலும் அவசியமெனலாம். யூனியன்கள்தோறும் ஓர் மாது பிரசாரகராக நியமிக்கப்படலாமென்றும், தற்போதைய நிலையில் ஒவ்வொரு ஜில்லா பாங்கும் ஓர் மாதை பிரசாரகராக நியமிக்கலாம். தமிழ் நாட்டிலே கூட்டுறவு இயக்கத்தில் மாதர்களின் நிலை மிக மிக பிற்போக்கானதாக இருப்பதால் பெண்பிரசாரகர்களை நியமிப்பதில் தமிழ் நாடே முன் வரவேண்டும்.

### கூட்டுறவாளர் காங்கிரஸ்

இங்கிலாந்தில் நடைபெறும் சர்வதேசக் கூட்டுறவாளர் காங்கிரஸ் மிகவும் விசேஷமானது. இக்காங்கிரஸில் உலகெங்குமுள்ள பிரபல கூட்டுறவாளர்கள் சந்திப்பதும், ஆங்காங்குள்ள நிலைமையைக் குறித்துப் பேசுவதும், கூட்டுறவு இயக்க விருத்திக்கான திட்டங்களை வகுப்பதும் வழக்கம். இதனால் உலகெங்கும் கூட்டுறவு இயக்கம் முன்னேற்றமடைய மார்க்கமுள்ளது. இந்தகைய மாபெரும் காங்கிரஸிற்கு சென்னை மாகாண கூட்டுறவு பாங்கு தலைவர் திரு. வி. ராமதாஸ் பந்துலு இந்தியாவின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிகிறோம். திரு. ராமதாஸ் பந்துலு அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் வெகு நாளாக சம்பந்தம் வைத்துள்ளார். இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் நிலையை நன்கறிவார். இங்கிலாந்தில் நடைபெறும் காங்கிரஸில் கலந்துகொள்ளும் திரு. ராமதாஸ் பந்துலு நம் நாட்டு நிலையையும், நமது தேவையையும்பற்றி தெளிவாக எடுத்துரைப்பார் என்பதை நாம் அறிவோம். மீண்டும் திரு. ராமதாஸ் தம் தாய் நாடு திரும்பியதும் மேல் நாடுகளில் அவர் பெற்ற அனுபவத்தால் நாம் பெரிதும் பயனடையலாமென்போம். திரு. ராமதாஸ் மேல் நாடு சென்று சுகமே திரும்ப வேண்டுமென விரும்புகிறோம்.

148732
600 003.


We are Gold Medalists in all the Exhibitions from 1916 onwards.




சஞ்சீவி குழந்தைகளுக்கு சஞ்சீவி

குரு மருந்துகளை வெல்ல வேறு மருந்து கிடையாது.

அனுபோகத்தில் காணலாம்.

மலை ஜுரங்களுக்கு
குரு
நிலவேம்பு திராகவம்
டாக்டர்-மதுரம்-திருச்சி

LOOK AT MY BABY,




GURU TONIC FOR CHILDREN
என் கண்ணே!
MY ANXIETY IS OVER.

குரு
பால்-பவுடர்
மாட்டு-பாலை
தாய் பாலுக்கு
சமமாக்குகிறது

குருமருந்துசாலை, திருச்சிறாப்பள்ளி.

பதிவு எண்: எம். 3126.



# குரு மருந்துகள்

எப்போதும் தங்க மெடல்களே பரிசு பெற்று வருகிறது.

## குழந்தை மருந்துகள் மிக விசேஷமானது.

குருமருந்துகள் உபயோகமாகாத வீடுகள் கிடையாது

(1) குரு கோரோஜனை மாத்திரை—மலத்தைக் கழித்து வியாதியை போக்கும்
(2) குரு கஸ்தூரி காரமாத்திரை
(3) குரு தைலம்—மகா சஞ்சீவியாக விளங்குகிறது.
(4) குரு பால் பவுடர்—மாட்டுப்பாலை தாய்ப்பாலுக்குச் சமானமாக்குகிறது
(5) குரு பாலர் டானிக்—ரத்தவிர்த்திக்கு சஞ்சீவி
(6) கக்குவானுக்கு குரு K. சொட்டு மருந்து—கைகண்டது
(7) குரு ஜீமா கழிம்பு—சகல கரப்பான்களுக்கும்
(8) சகலரண கழிம்பு—சகலவிதப் புண்பொடிகளுக்கு
(9) வயிற்றுக் கடுப்பு மருந்து
(10) தேரை நோய்—எலும்புருக்கி நோய்க்கு.
(11) குழந்தைகள் வயிற்றுக் கட்டிக்கு
(12) கெர்ப்ப ஊரல் என்கிற கிரந்தி ரோகத்துக்கு

☛ குழந்தைகளுக்கு இன்னும் மிக அருமையான மருந்துகள் இருக்கிறது.

தங்க மெடல் பரிசுகள்—உயர்ந்த நற்சாட்சியங்கள்
சதா பெற்று வருகிறது.

டாக்டர் அ. மதுரம், திருச்சி

Printed and Published by Dr. A. Mathuram at the Guru Medical Hall Press, Trichinopoly.